பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 18, சனிக்கிழமை 03.12.2016 | கதிர் 28

# மட்டு. நகரில் பதற்ற நிலை!



## பொதுபலசேனா ஆர்ப்பாட்ட முஸ்தீபு

கொழும்பு, டிசெம்பர் 03

**பொதுபலசேனா அமைப்பு பெரும் எண்ணிக்கையான பிக்குமாருடன் சேர்ந்து மட்டக்களப்பு நகருக்கு வந்து, அங்கு இன்று பெருத்த எடுப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவிருக்கும் சூழலில் அங்கு பதற்றநிலை ஏற்பட்டிருக்கின்றது.**

**தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் சிங்கள மக்களைத் தூண்டி, இனமுறுகலை ஏற்படுத்தும் எத்தனமாக இந்த ஆர்ப்பாட்டம் அமையக்கூடும் என எச்சரிக்கப்படுகின்றது.**

மட்டக்களப்பு மங்களராம விகாரையின் விகாராதிபதி வண. சுமணதேரர் அங்கு தனித்து விடப்பட்டிருக்கின்றார் எனத் தெரிவித்து, அவருக்கு ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கிலேயே இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகப் பொதுபலசேனா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மங்களராம விகாரையின் தேரர் அண்மைக் காலமாக சர்ச்சைக்குரியவராக மாறி வருகின்றார்.

தன்னுடைய விகாரைக்கு வரவில்லை என்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தகாத வார்த்தைகளால் திட்டியவர் அவர். அண்மையில் தமிழ் கிராம சேவையாளர் ஒருவரை மிக மோசமான வார்த்தைகளி

பக்கம் 19 »

## அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் பொலிஸாரே முழுப் பொறுப்பு!

### எச்சரிக்கிறார் கிழக்கு முதலமைச்சர்

கொழும்பு, டிசெ.03

மட்டக்களப்பில் பொது பலசேனா இன்று ஏற்பாடுசெய்துள்ள ஆர்ப்பாட்டத்தினபோது அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெற்றால் அதற்கான முழுப்பொறுப்பையும் பொலிஸாரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

–கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ்நசீர் அஹமட் இப்படிப் பொலிஸாரை எச்சரித்திருக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மட்டக்களக்கப்பு நகரில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பொலிஸார் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என நான் பணிப்புரை விடுத்துள்ளேன்.

மக்களின் இயல்பு வாழ்க்

பக்கம் 20 »

## அம்பாறையிலும் அச்சம்!

கொழும்பு, டிசெ.03

மட்டக்களப்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காகத் தென்னிலங்கையிலிருந்து பஸ்களில் புறப்பட்டுவரும் பொதுபலசேனா அமைப்பின் பிக்குமார், வழியில் அம்பாறை மாவட்டத்திலும் தமது கைவரிசையைக் காட்டுவர் என எதிர்பார்க்கப்படுகிறது என நேற்று அம்பாறையில் செய்தி பரவியது.

அதனால் அங்கும் அச்ச நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அம்பாறைநகரமத்தியிலிருந்து சுமார் மூன்று மைல் தொலைவிலுள்ள - தமிழர் பிரதேசமான - மாணிக்கமடு என்ற குன்றுப் பகுதியில் சில வாரங்களுக்கு முன்னர்திடீரெனக்கொண்டுவந்து

பக்கம் 19 »

## தனியார் பஸ் உரிமையாளர் போராட்டம் இன்று இரண்டாம் நாளாகவும் தொடரும்

### இரு தரப்பும் இழுபறி; இப்போதைக்குத் தீர்வு இல்லை

கொழும்பு டிசெ.03

மாகாணங்களுக்கு இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்துக்கும் அரசுக்கும் இடையே இழுபறி நிலை நீடிப்பதால் இன்று இரண்டாவது நாளாகவும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதி மீறல் குற்றத்துக்கான தண்டப்பணம் 25 ஆயிரம்ரூபாவாக அதிகரிப்பதற்கு வரவு – செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாகாணங்களுக்கிடையே சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் போராட்டத்தில் குதித்துள்ளது.

இதனால், மாகாணங்களுக்கிடையேயான போக்குவரத்துச்

பக்கம் 20 »

## பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மட்டக்களப்பில் சடலமாக மீட்பு!

### ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றபோது காணாமல் போனவராம்

மட்டக்களப்பு டிசெ.03

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகத்துவாரம் பகுதியில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மாமாங்கம் பிரதேசத்தைச் சேர்ந்த சிவதாசன் விஜிதரன் (வயது-48) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது.

இவர் நேற்று முன்தினம் கல்லடி பாலத்தில் இருந்து தொலைபேசியில் யாருடனோ உரையாடி

பக்கம் 20 »

## வழிமறிப்புச் செய்த ஓட்டோச் சாரதிகள்; கண்ணீர்ப் புகைக் குண்டு வீசிக் கலைப்பு

### கொழும்பு – நீர்கொழும்பு பாதையில்

கொழும்பு, டிசெ.03

போக்குவரத்து விதி மீறலுக்கான குற்றத்தண்டப்பணத்தை அதிகரிக்கும் அரசின் உத்தேசத் திட்டத்தை ஆட்சேபித்து, நேற்று ரயில் பாதையை மறித்து ஓட்டோச் சாரதிகள் நடத்திய வழிமறிப்புப் போராட் டத்தைக் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசி பொலிஸார் கலைத்தனர்.

கொழும்பு – நீர்கொழும்பு பிர

பக்கம் 19 »

### யாழ்.பல்கலைக்கழக மோதல்:

## தமிழ் – சிங்கள மாணவர்கள் சமாதானமாகச் செல்ல அனுமதி

### சுமந்திரனின் கோரிக்கை நீதிமன்று ஏற்பு

யாழ்ப்பாணம், டிசெ.03

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற தமிழ், சிங்கள மாணவர்களுக்கு இடையிலான மோதல் சம்பவம் தொடர்பான வழக்கில் தமது முறைப்பாடுகளைத் தாங்கள் மீளப்பெறவுள்ளனர் என சம்பந்தப்பட்ட தமிழ், சிங்கள மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்கள் இரு தரப்பினரையும் முறைப்பாடுகளை வாபஸ் பெறுமாறு. நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 16 ஆம்

பக்கம் 20 »

### பல்கலை மாணவர் கொலை:

## ஐந்து பொலிஸாருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.03

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்றசந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஐந்துபொலிஸாரையும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ். சதீஸ்கரன் உத்தரவிட்டுள்ளார்.

சுட்டுக்கொலை செய்யப்பட்ட மாணவர்கள் இருவர் சார்பாகவும் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

யாழ்ப்பாணம் – கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் வைத்துக் கடந்த ஒக்ரோபர் மாதம் 21 ஆம்

பக்கம் 20 »

## இந்தியாவிலிருந்து ரூ.1600 கோடிக்கு 16 ரயில் இயந்திரங்கள்

கொழும்பு, டிசெ.03

இந்தியாவிடம் இருந்து 10 ரயில் இயந்திரங்களையும், 6 டீசல் ரயில் தொகுதிகளையும், 700கோடி இந்திய ரூபா செலவில் (இலங்கைப் பணத்தில் சுமார் 1,600 கோடி ரூபாவில்) இலங்கை கொள்வனவு செய்யவுள்ளது.

இலங்கை அரசுக்கு700 கோடி ரூபா பெறுமதியான ரயில்வே உப்கரணங்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் தங்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என இந்திய ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்திய ரயில்வேத் திணைக்

பக்கம் 20 »

## குமார் குணரட்ணம் நேற்று விடுதலை

கொழும்பு, டிசெ.03

ஒரு வருட சிறைவாசத்தின் பின்னர் முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் சபை உறுப்



பினர் குமார் குணரட்ணம் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார். பக்கம் 19 »

### அளப்பு அருணாசலம்



மாணவர் முன்மாதிரியை அரசியல் தலைவர்களும் பின்பற்றினால் தீர்வு சுலபமாய் வந்திடும் பாருங்கோ...!

# ரீ.சி.ரீ. வணிக வளாகத்தில் நன்கொடை நிகழ்வுகள்



*தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவன் தியாகேந்திரனின் 65 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள ரீ.சீ.ரீ. வணிக வளாகத்தில் உதவித் திட்டங்கள், நன்கொடை வழங்கல் உட்படப் பல அறப்பணி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.*
*கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்குரிய வாழ்வாதார உதவித் தொகைகள், செயற்றிட்டங்கள், புற்றுநோயாளர்கள் மற்றும் முதியவர்களுக்கான மருத்துவ உதவிகள் வறுமைக்கோட்டுக்குட்பட்ட பாடசாலை மற்றும் பல்கலை மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புத் தொகைகள், தார்மீக உதவித் திட்டங்கள், சூழல் பாதுகாப்புத் தொடர்பான உதவித் திட்டங்கள் பல அறப்பணிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.*
*வலுவிழந்தோருக்கான சக்கர நாற்காலிகளும், 250 பாடசாலை மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. நிகழ்வில் சிறப்பம்சமாக முதியோரில்லங்களிலுள்ள முதியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.*
*நிகழ்வுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முதியோர்கள், சிறுவர் இல்லத்தவர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.*

## இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முல்லைத்தீவில் வேட்புமனுத் தாக்கல்

முல்லைத்தீவு, டிசெ.03

2017 ஆம் ஆண்டுக்கான இளைஞர் பாராளுமன்றத் தேர்தலுக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலக பிரிவுகளிலும் இருந்து வேட்பு மனுத்தாக்கல் செய்த 28 பேர் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளணர் எனதேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி கே.சரோஜா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 05 பேரும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 05 பேரும், துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 04 பேரும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 06 பேரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 05 பேரும், மணலாறு பிரதேச செயலக பிரிவில் 03 பேருமாக 28 பேர் தேர்தலில் போட்டியிடத் தகுதிபெற்றுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் வி.நிருபரன், எம்.சுலந்தீபன், எஸ்.ஜெனகன், ஜே.லக்சிதரன்,பி.கிருசாந்தன் ஆகியோரும், மாந்தை கிழக்கு பிரதேசத்தில் எம்.கிரிசாந், எம்.மகிந்தராசா, கே.கோகுலதாஸ், என்.ரமேஸ்குமார், என்.நிரோசன் ஆகியோரும், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் வை.நினோசன், கே.விநுசன், ஏ.குமணன, ஏ.தஜீவன் ஆகியோரும் கரை துறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் வி.பசீலன், எஸ்.அர்சாத், எம்.தயந், எம்.சுகைல், எம்.ஜரித், பி.காந்தரூபன் ஆகியோரும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் ஏ.ஜீலிய துசாந்தினி, எஸ்.ஜீவகி, பி.பகிவன், எஸ்.ஜெயந்தி, கே.குயிந்தவன் ஆகியோரும், மணலாறு பிரதேச செயலாளர் பிரிவில் விராஜ் மது சங்க, கஜானி கீர்த்திகா, கிருனி வக்சலா ஆகிய 28 பேருமே தேர்தலில் போட்டியிடத்தகுதிபெற்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இத்தேர்தலுக்கான வாக்கெடுப்பு நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 7.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## வடக்கில் விரைவில் தேசியத் தொலைக்காட்சி

அடுத்த வருடத்தில் வடக்கு மாகாணத்தில் தொலைக்காட்சி நிலையம் ஒன்று அரசால் நிறுவப்படும் என்று நாடாளுமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கலந்துரையாடல் மற்றும் நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசனும், ஊடகத்துறை பிரதி அமைச்சச் கருபரணவிதானவும் மேற்படி தகவலை, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெவித்தனர்.


வடக்கு மக்களின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில், குறிப்பிட்ட தொலைக்காட்சி அமையும் என்று அமைச்சர்கள் இருவரும் கருத்து வெளியிட்டனர்.

மேற்படி நிலையம் வடக்கு வாழ் தமிழ் மக்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் செயற்படும் என்று மனோ கணேசன் தெவித்தார்.

உத்தேச தொலைக்காட்சி நிலையம், ரூபவாஹினியின் பெரும் பங்களிப்புடன் செயற்படும் என்று பிரதி அமைச்சர் கருபரணவிதான அறிவித்தார்.

தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் மிக்க தேர்ச்சி உள்ளவர்கள் பணிக்கு அமர்த்தப்படுவர் என்றும் அவர் தகவல் வெளியிட்டார்.

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா 'லாண்ட் மாஸ்டரி'ல் பயணம்



சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கடந்த புதனன்று எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விஜயம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளிலும் உதவித்திட்ட நடவடிக்கைகளிலும் கலந்துகொண்டார். எழுவைதீவில் போய் இறங்கிய அமைச்சர் அங்கிருந்த ஒரே வாகன வசதியான லாண்ட் மாஸ்டரில் பயணம் செய்து, பாடசாலைக்கு விஜயம் செய்கின்றார். வேலணைக் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொ.சிவானந்தராஜாவும் முன்னால் அமர்ந்திருக்கின்றார். (உ)

## கடல் கொந்தளிப்பால் காணாமற்போன மீனவர்கள் அனைவரும் மீட்கப்பட்டனர்

வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றமுத்த தாழ்வு மண்டலம் காரணமாக ஏற்பட்ட கடல்கொந்தளிப்பை அடுத்துக்காணாமற்போனவர்கள் எனக் கருதப்பட்ட மீனவர்கள் அனைவரும் பாதுகாப்பாகக் கரை திரும்பியுள்ளனர்.

வடமராட்சியைச் சேர்ந்த எட்டு மீனவர்கள் கடந்த புதன்கிழமை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நிலையில் காணாமற்போயிருந்தனர். ஆனால், சக மீனவர்களின் தேடுதல்களினால் நேற்று முன்தினம் மாலை வரை ஆறு மீனவர்கள் மீட்கப்பட்டிருந்தனர்.

ஆனால், ஒரு படகில் சென்ற இரு மீனவர்கள் மட்டும் நேற்றுக் காலை வரை கரை திரும்பியிருக்கவில்லை. தொடர்ந்து இடம்பெற்ற தேடுதல்களால் அந்த மீனவர்களும் நேற்று முற்பகல் 10 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

எரிபொருள் தீர்ந்த நிலையில், நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தவர்களின் படகைக் கண்டுபிடித்த மீனவர்கள் அவர்களுக்குத் தமது எரிபொருளைக் கொடுத்து பாதுகாப்பாகக்கரைக்கு அழைத்து வந்தனர். (ம-23)

## புதிய அதிபர்களுக்கான கலந்துரையாடல்

வடமாகாணத்தில் புதிதாக அதிபர்களுக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றோருக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி நாவலர் கல்வி நிலையத்தில் நடைபெறும் என வடக்கு மாகாண புதிய அதிபர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதிபர்கள் தம்முடன் அதிபர் நியமனக் கடிதம், மத்திய கல்வி அமைச்சால் மாகாணத்துக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட கடிதம் ஆகியவற்றின் பிரதிகளை எடுத்துவரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (உ)

## முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும்

வடக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் ஏற் பாட்டில் வடமாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும், கலை நிகழ்வுகளும் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிறுக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசாவும், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும் கலந்து கொள்வர். (இ-7)

## கைதடி முன்பள்ளி பரிசளிப்பு விழா

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் கலை விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.சரோஜாதேவி, கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் சு.சிவயோகினி ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-7)

## சைவநெறித் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு

சைவ பரிபாலனசபையால் நடத்தப்பட்ட தரம்2 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கான சைவநெறி, தரம் 2 முதல் தரம் 8 வரையான மாணவர்களுக்கான தமிழ் மொழி பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் எதிர்வரும் 07ஆம் திகதி முதல் சைவபரிபாலன சபை மண்டபத்தில் குழு முறையில் நடைபெறவுள்ளன.

இப் பணிக்கு சைவநெறி, தமிழ் மொழி கற்பிக்கும் தகைமை பெற்றுள்ள ஆசிரியர்களை உதவும்படி பரீட்சைச் செயலாளர் கேட்டுக் கொள்கிறார்.

இப்பணியில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் பெயர், விவரங்களை பரீட்சைச் செயலாளர், சைவபரிபாலன சபை, 66, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்குக் கடிதம் மூலம் அல்லது தொலைபேசி மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (இ)

## கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

மார்க்கண்டு சுவாமிகள் சபையின் ஏற்பாட்டில் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை மற்றும் இந்து அறநெறிப் பாடசாலைகளின் கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் சபை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

சபைத் தலைவர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தீவகக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும், சிறப்பு விருந்தினராகப் பண்டத்தரிப்பு ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி திருமதி பவளராணி செல்வராசாவும் கலந்து கொள்வர். (இ-7)

# முகமாலையில் மிதிவெடி அகற்றப்பட்ட காணிகள் மக்களிடம் கையளிப்பு





கிளிநொச்சி,டிசெ.03

கிளிநொச்சி பச்சிளைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இந்திராபுரம் மற்றும் முகமாலை பிரதேசங்களில் கண்ணிவெடி அகழ்வு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையில், அப்பகுதிகளை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கடந்த 2000ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் குறித்த பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் காணிகளே நேற்று அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்திராபுரம் பிரதேசத்தில் 14 குடும்பங்களின் 25 ஏக்கர் காணியும், முகமாலையில் 55 குடும்பங்களுக்கான ஆயிரத்து 800 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட காணிகள், காணி உரிமையாளர்களால் அடையாளம் காணப்பட்டு, அப்பகுதிகளில் விரைவில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யுத்த காலத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்பினர்களதும் யுத்தகளமாக காணப்பட்ட பிரதேசமாக இது இருந்தது.


பெருமளவு கண்ணிவெடிகள், மிதிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருள்கள் என்பன நிறைந்த பிரதேசமாக காணப்பட்டது. இந்த பிரதேசங்களில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் ஈடுபட்ட நிறுவனங்கள் கடந்த காலங்களில் மிகப்பெரும் சவால்களுக்கு முகம்கொடுத்து தங்களது பணியை முன்னெடுத்திருந்தன. இதன் போது சில பணியாளர் கள் பலியாகியும் இருந்தனர்.


தற்போது குறித்த பகுதிகள் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் உத்தியோகபூர்வமாக மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டு இன்று மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(ஜ-70)

## பல்கலை. புகுமுக மாணவர்கள் வவுனியாவில் விழிப்புணர்வு

### போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக






பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டு புகுமுக மாணவர்களாக உள்ள வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களுக்கு போதைப்பொருளின் பாதிப்புகள் தொடர்பான செயலமர்வொன்று நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா சிந்தாமணி பிள்ளையார் ஆலய மண்டபத்தில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக ஜனாதிபதி செயலணியால் முன்னெடுக்கப்பட்ட இந் நிகழ்வில் சுமார் 200 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

சிந்தாமணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக ஜனாதிபதி செயலணி அதிகாரிகள், வளவாளர்கள் மற்றும் மாணவர்கள் அழைத்து வரப்பட்டனர். இதனையடுத்து வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி. திரேஸ்குமார் வரவேற்புரை நிகழ்த்த செயலமர்வு ஆரம்பமாகியது.

இந் நிகழ்வில் போதைப்பொருள் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பேராசிரியர் சிறிசேன, வவுனியா மேலதிக மாவட்ட செயலாளர் தி. திரேஸ்குமார், உதவி அரச அதிபர் என். கமலதாசன், யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக விரிவுரையாளர் கலாநிதி ஜெயசீலன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-100)



முல்லைத்தீவு மாவட்டம் ஒதியமலை கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்த நினைவு நிகழ்வில் பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா மற்றும் வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வா.கமலேஸ்வரன் மற்றும் வடமாகாணசபை உறுப்பினர் துரைராஜா ரவிகரன், ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். படுகொலை இடம்பெற்ற ஒதியமலை கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. ஒதியமலைப்பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. (ஐ-81)

## கேப்பாப்புலவின் ஒரு பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதி

முல்லைத்தீவு கேப்பாப்புலவின் ஒரு பகுதியில் மக்கள் மீளக் குடியேற இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது என்று கேப்பாப்புலவு மக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளிடம் கேப்பாப்புலவின் பாடசாலைக்கு எதிர்ப்பக்கமாக உள்ள பகுதிகளில் குடியேறுவதற்கான இணக்கத்தை இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

படையினரால் 2012ஆம் ஆண்டில் நலன்புரி முகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்ட மக்கள் கேப்பாப்புலவின் சூரிபுரம் பகுதியில் மாதிரிக் கிராமம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தமது சொந்த இடங்களில் குடியேற்றுங்கள் என கேப்பாப்புலவு மக்கள் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தி வரும் நிலையில் கேப்பாப்புலவின் ஒருபகுதியில் குடியேறுவதற்கான இணக்கப்பாட்டை இராணுவம் தெரிவித்தது என்று அவர்கள் கூறினர்.

(ஐ-81)

## வவுனியா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா,டிசெ.03

வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் மீது வைத்தியசாலை விடுதியில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவர் தாக்கியிருந்தார்.

குறித்த சம்பவத்தை கண்டித்து வவுனியா வைத்தியசாலை தாதியர்கள் நேற்று ஒரு மணி நேரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

வைத்தியசாலை வளாகத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட தாதியர்கள் வைத்தியசாலையை பிரதான வீதி வழியாக வந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.



'வைத்தியசாலை விடுதிக்குள் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில் தாதியர்களின் பாதுகாப்பு கேள்விக்குறி..?, முகத்தை மூடி மறைத்துக் கொண்டு ஜக்கெற் உடன் இனந்தெரியாத நபர் எவ்வாறு விடுதிக்குள் நுழைந்தார், குற்றவாளியை உடனடியாக கைது செய், தாதியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து' உள்ளிட்ட கோஷங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

வைத்தியசாலை விடுதியில் இருந்து கடமைக்குச் செல்லத் தயாராகிய போது, விடுதியில் வைத்து வியாழன் தாக்குதலுக்குள்ளான எஸ்.மினேஸ் (வயது 30) என்ற தாதிய உத்தியோகத்தர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

விரைவில்
எமது யாழ் மண்ணில்...
உங்கள் வீட்டு
கூரைகளுக்கு
புதிய அத்தியாயம்
ஆரம்பம்...
சியன
யாழ்ப்பாணம்
இலங்கையருக்கான நவீன கூரைத் தெரிவுகள்...
Hospital Road, Jaffna.
[வேம்படி சந்திக்கு அருகில்]
077 9494200
jaffnasiyana
(C/097)

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம். உயிர் முறைமைகள். தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(C/096)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9444, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

## சுமந்திரன் - கஜேந்திரகுமார் பகிரங்க விவாதத்துக்கு வருவார்களா?

இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனை தொடர்பில் தமிழர் தரப்பின் இரண்டு முக்கிய தலைவர்கள் மத்தியில் கொள்கை, கோட்பாட்டு வியாக்கியானம் தொடர்பில் ஒரு முக்கிய சர்ச்சை எழுந்திருக்கிறது.

தீர்வு யோசனைக்கான அடிப்படை வெளியாகும்போது இத்தகைய சர்ச்சைகள் உருவாகும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், தீர்வுக்கான அடிப்படை தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைக் கடந்த புதனன்று அறிவித்தார்.

"ஒற்றையாட்சிக்கு நாம் இணங்கவில்லை" என்றமுன்னறிவித்தலோடு, தாம் எதிர்பார்க்கின்ற தீர்வின் சில அடிப்படைகளை அவர் விவரித்தார்.

"சுமந்திரன் விவரித்த திட்டம் ஒற்றையாட்சியை முழு அளவில் - சொல்லிலும், கருத்திலும் - உறுதிப்படுத்தி, ஏற்பதாகத்தான் அமைந்திருக்கின்றது என்பது வெளிப்படை. இது, காலம் காலமாகத் தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய அரசியல் குறித்துப் பேசி வந்தமைக்கு முற்றிலும் மாறான நிலைப்பாடு. 2009 யுத்த முடிவுக்குப் பின்னர் ஒவ்வொரு தேர்தலிலும் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனங்களிலும், உரைகளிலும் முன்வைத்த தமிழரின் இறையாண்மை என்ற அடிப்படைக்கு மாறானது - தமிழர்களிடம் தாங்கள் பெற்றுக் கொண்டதாகக் கூட்டமைப்புக் கூறும் ஆணைக்கும் மாறானது."-என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருக்கின்றார்.

"தமிழ் மக்களின் இறைமையின் அடிப்படையில் - அதை உறுதி செய்யும் - தீர்வுக்கு மட்டுமே கூட்டமைப்பு இணங்கும்; இணங்குவோம்." - என்பது கடந்த வாரம் வரை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா திரும்பத் திரும்ப உறுதி மொழியாகக் கூறி வந்த விடயம்தான்.

ஆனால், அவரின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் "வார்த்தை மாயங்களை - சொல் ஜாலங்களை - விடுங்கள். சுமுகமான தீர்வைப் பாருங்கள்" என்ற பீடிகையோடு நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இந்த இறையாண்மை விவகாரம் சறுக்கிப் போய்க் கிடப்பது உண்மை.

தீர்வுத் திட்ட யோசனைக்கான முன்னோட்டத்தை நாடாளுமன்றத்தில் விவரித்த சுமந்திரன், " நான் இறைமையைப் பகிர்ந்து கொள்வது குறித்துப் பேசவில்லை. அப்படி இறைமையை நாம் பகிர்ந்து கொள்ள முடியும். அப்படிப் பகிர்வதில் தவறில்லை. ஆனால், நான் அதனைக் கோரவில்லை. ஆட்சி அதிகாரத்தைப் பகிருங்கள் என்று தான் கேட்கிறேன்." - என்ற சாரப்பட நாடாளுமன்றத்தில் விளக்கமளித்தார் என்பது உண்மையே.

இதுவரை காலமும், தமிழ்த் தேசிய அரசியலையும், தமிழரின் இறைமையையும் போற்றிப் பிரசார உத்தியாகப் பயன்படுத்தி வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரின் இறைமை பற்றி வலியுறுத்தப் போவதில்லை என்று நாடாளுமன்றத்தில் ஒப்புக் கொண்டிருக்கின்றமை மிக முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சுமந்திரனின் உரையை நாடாளுமன்ற இணையம் மூலம் நேரடியாகப் பார்த்து, செவிமடுக்கலாம். அதை நோக்கும் போது, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இப்போது சுமந்திரனுக்கு எதிராகச் சுமத்தும் குற்றச்சாட்டில் ஏதோ வலுவான ஓர் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

2009 மேயில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுத முனையில் அழிக்கப்படும் வரை புலிகளின் வழிகாட்டலில்தான் கூட்டமைப்பு இயங்கியது.

தம்மைக் கூட்டமைப்பின் தலைவராக விடுதலைப்புலிகள் தெரிவு செய்யவில்லை என்று சம்பந்தன் ஐயா குறிப்பிட்டாலும், உண்மையில் அச்சமயம் வன்னியின் வழிகாட்டலில் இயங்கியவர்தான் அவர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இருக்கும் வரை சம்பந்தனுக்கு அடுத்த நிலையில் - இன்று சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இருக்கும் பதவி அந்தஸ்தில் - கூட்டமைப்புக்குள் செயற்பட்டவர் கஜேந்திரகுமார்தான்.

புலிகளின் அழிவோடுதான் - கூட்டமைப்பின் செயற்போக்கிலும், கொள்கை நிலைப்பாட்டிலும் அதிருப்தி அடைந்த கஜேந்திர குமார் பொன்னம்பலம் - கூட்டமைப்பை விட்டு வெளியேறி தனியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஸ்தாபித்தார்.

அத்தோடு, கூட்டமைப்பில் கஜேந்திரகுமாரின் இடத்தை சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுவீகரித்துக் கொண்டார்.

சம்பந்தன் ஐயாவின் அடுத்த நிலையில் இருந்தவரும், அடுத்த நிலையில் இப்போது இருப்பவரும் கருத்துச் சர்ச்சைக்குள் வந்திருக்கின்றனர்.

" ஒற்றையாட்சி என்றால் என்ன? சமஷ்டி என்றால் யாது? இறையாண்மை எத்தகையது? தமிழருக்கும் அந்த உரிமை உண்டா?" - என்பன போன்ற பல கேள்விகள் இந்த இருவரின் சர்ச்சையால் மீள எழுந்துள்ளன.

அந்த விடயங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக-

இந்த இருவருமே பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருவது, இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு தாங்கள் கருத்து நிலைப்பாட்டை ஒரு தரம் துடைத்துப் பார்த்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கும்.

தனித் தனியாக பேட்டிகள், செவ்விகள் அளித்து, மக்களைக் கூட்டி ஆவேசப் பேச்சுக்களை ஆற்றி, இந்த சர்ச்சைகள் தொடர்பில் மக்களுக்கு மேலும் குழப்பங்களை ஏற்படுத்துவதை விட -

பொருத்தமான ஒழுங்கமைப்பாளர் ஒருவரை நடு நிலையாளராக வைத்துக் கொண்டு, தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்கள் ஊடாக நேரடி ஒலி, ஒளிபரப்புச் செய்யும் வசதியுடன் ஒரு நேரடி விவாதத்தை நடத்துவது இந்தக் கொள்கை கோட்பாட்டு சர்சையில் மக்கள் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வர வழி செய்யும்.

" சம்பந்தப்பட்டோர் செய்வார்களா? திராணியுள்ள இந்த இரு தலைவர்களும் இதற்கும் பின்னிற்க மாட்டார்கள் என நம்புகிறோம்.

கொள்கை நிலைப்பாடுகளை விளக்கும் வகையில் அவர்கள் நடத்தக்கூடிய ஆரோக்கியமான விவாதம் தமிழர் அரசியலின் செல்நெறியைச் சீர்மைப்படுத்தும் என்பது திண்ணம் அல்லவா...?

# விட்டுக்கொடுக்கப்பட்டது தமிழ்த் தேசத்தின் இறைமையா?

**திருநாவுக்கரசு பாலமுருகன்**

இலங்கைத்தீவின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, பகிரப்பட்ட இறையாண்மையின் அடிப்படையில் இருக்கவேண்டும் என்பது 2010 இன் பின்னர் வந்த அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டு - சரி பிழைகளுக்கு அப்பால் - மக்கள் ஆணை பெறப்பட்டதெனக் கூட்ட மைப்பினராலேயே சொல்லப்படுகின்ற கோரிக்கையாகும்.

அதைவிட, சம்பந்தர் பேசும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேசையில் தட்டி உரத்துச் சொல்லும் வாசகமும் இதுதான்.

(இனப்பிரச்சினைக்கானதீர்வு, இறையாண்மை மத்தியில்தான் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டு அதனைப் பகிர்வதா (Shared sovereignty) அல்லது இறையாண்மையின் கூட்டின் (Pooling of sovereignty ) மூலம் உருவாகும் அரசுதான் (State) என்ற அடிப்படையில் அமையுமா என்பதே விவாதத்துக்குரியதென்பது பிறிதொரு விடயம்).

உண்மையில் அரசமைப்பு ஒன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வென்ற பெயரில் உருவாகும் போது, இப்படிப்பட்ட விவாதங்கள் தான் மக்கள் மத்தியில் எழுந்திருக்க வேண்டும்.அவை தான் ஊக்குவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், இப்போது அவையெல்லாம் தேய்ந்து, ''இறையாண்மையைப் பகிர்வதையே நாம் கேட்கவில்லை '' என்று தமது விஞ்ஞாபனத்தில் தாம் கூறியவற்றையே மறுதலித்து, சுமந்திரன் தாமே நாடாளுமன்றத்தில் அறிவிக்கும் நிலைக்கு வந்திருக்கிறது.

தமிழர்கள் தனித்துவமான ஓர் இனம், எமக்குத் தனித்துவமான இறையாண்மை இருக்கிறது எனும் அடிப்படையிலான தீர்வுதான் எமக்கான தீர்வாக அமையும். மாறாக, அதை ஏற்க மறுத்து பொதுவான அடிப்படையில், அனைவரும் சிறிலங்கர்கள் என்ற நோக்கிலான தீர்வு, இறுதியில் நாம் அடையாளம் இன்றிக் கரைந்து போதலுக்கே (Assimilatioh )வழிவகுக்கும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்கின்ற பெயரில், தமிழர்களின் சம்மதத்தோடு வரவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிற உத்தேச அரசமைப்பில், வடக்கு கிழக்கு இணைப்பு என்பது இருக்கப் போவதில்லை என ஏற்கனவே சுமந்திரன் தெரிவித்து இருக்கிறார்.(அதற்கும் சாட்டு சொல்வதற்கு, வழமையான வார்த்தை விளையாட்டு மூலமான பூச்சுற்றும் கதை தயாராகவே இருக்கிறது).

இப்போது கூட்டமைப்பு விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டவாறான இறையாண்மை பகிரப்பட்டதாக வருகின்ற தீர்வும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த மதத்துக்கான முன்னுரிமை பேணப்படும் என்பதும் மாறப்போவதில்லை என ஜனாதிபதி, பிரதமர் உட்பட, இரண்டு பெரும்பான்மைக் கட்சியினரும் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள்.

ஒற்றையாட்சி மாறப்போவதில்லை என ஜனாதிபதி, பிரதமர் அமைச்சரவை உட்பட அனைத்து பெரும்பான்மைக் கட்சிகளும் அறிவித்துள்ளன.

ஆகமொத்தத்தில் 1972, 1978 குடியரசு யாப்புகளிலிருந்து, இனப்பிரச்சினை சார்ந்து, வேறுபடக்கூடிய ஒரே ஒரு விடயம்,

''இது தமிழர்களின் பங்குபற்றலுடன், அவர்களின் சம்மதத்துடன் உருவாகிய அரசமைப்பு'' என்பது மட்டும்தான்.

ஆனால், கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தில் இருப்பதை மீள ஞாபகப்படுத்துவது கூட இனவாதமாக அல்லது 'நல்லிணக்கத்தை' குழப்புவதாக அல்லது கட்சி சார்பானதாகச் சித்திரிப்பதற்கு, அவர்கள் மட்டுமல்ல எம்மில் சிலரும் கூட ஆயத்தமாக இருக்கும் போது, இவற்றையெல்லாம் இலகுவாக கடந்து செல்வது, அதிகார வர்க்கத்துக்கும் அவர்களின் ஆசி பெற்றவர்களுக்கும் அவ்வளவு சிரமமாக இருக் காது.

அதைவிட, ' மஹிந்தர் வந்துவிடுவார்' என்கிற உணர்ச்சி அரசியற்சந்தையில் கேள்விச்சுட்டி அதிகமாக உள்ள கோஷமும், வார்த்தைஜால விளையாட்டுகளுக்கும் மேலதிகமாக, கைகொடுப்பதற்கு கைவசம் இருக்கின்றன. அதை விட இனி என்ன வேண்டும்?

"தன்னெஞ்சு அறிவது பொய்யற்க, பொய்த்த பின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்."

ஆனால் அப்படி உறுத்துவதாக இருந்தால் கூட, அது நெஞ்சுடையோர்க்கு(மனச்சாட்சி) மட்டும் தானே!!

# திசைமாறி வந்த மீனவர்கள் தமிழகத்துக்கு அனுப்பி வைப்பு



யாழ்ப்பாணம், டிசெ.03

கடல் கொந்தளிப்பு காரணமாக திசைமாறி வந்த தமிழக மீனவர்கள் 5 பேர் கால நிலை சீரானதை அடுத்து தமிழகத்துக்கு மீண்டும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர்.

வடக்கில் புதன்கிழமை இரவு தொடக்கம் கால நிலை் சீரின்மை காணப்பட்டதால் கடல் கொந்தளிப்பாகக் காணப்பட்டது.

கடல் கொந்தளிப்பு காரணமாக தமிழக மீனவர்கள் திசை மாறி வடக்கு கடற்பிரதேசத்துக்கு வந்த நிலையில் வடமராட்சி மீனவர்களால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காப்பாற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டனர்.

தமிழகம் நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை கிராமத்தைச் சேர்ந்த முத்தப்பன் நடராஜன் (வயது 43), நடராஜன் செல்வம் (வயது 39), நடராஜன் சங்கர் (வயது 36), பழனி பாலு (வயது 36), ராஜகுண்டம் கோவிந்தசாமி (வயது 30) ஆகிய ஐந்து மீனவர்களே காப்பாற்றப்பட்டனர்.

அந்த மீனவர்கள் ஐந்து பேரும் நேற்று வெள்ளிக்கிழமை கால நிலை சீரானமையை அடுத்து மீண்டும் தமிழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (எ)

## புனர்வாழ்வுச் சங்க நிர்வாக சபை கூட்டம்

வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் மாதாந்த நிர்வாக சபைக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்துக்கு சகல நிர்வாக சபை அங்கத்தவர்களையும் ஜே/233, ஜே/234, ஜே/235, ஜே/247, ஜே/249, ஜே/250, ஜே/251 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் அனைவரையும்கலந்துகொள்ளுமாறும் சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (இ-7)

## நாளை

04.12.2016
ஞாயிற்றுக்கிழமை
திதி : பஞ்சமி முன்னிரவு 11.43 வரை
நட்சத்திரம் : உத்தராடம் முற்பகல் 7.38 வரை
சுபநேரம் 9.15 – 10.45
இராகுகாலம் 4.45 – 6.15 வரை

JSAC

பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

பெண்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டால் அடக்கிவிடுவார்கள் என்று பயப்படுகிறாயா? உனக்கு வாய்ப்பளித்தவர்கள் எப்போதுமே சமத்துவத்திற்கு எதிரானவர்களாகமாட்டார்கள்.

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

16
2016

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி எந்த நாட்டுக்குமே அச்சுறுத்தல் அல்ல

## ஹொங்கொங்கில் ரணில் தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.03 இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்தியானது பிராந்தியத்தின் எந்த நாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையாது. அந்த வளர்ச்சியானது பிராந்தியத்துக்கு நிறைவைத் தரும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தின் கேந்திர இடத்தில் அமைந்துள்ள இலங்கை போன்ற சிறிய நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

தி இக்கோனோமிஸ்ட் சஞ்சிகை ஒழுங்கு செய்த 2017ஆம் ஆண்டில் உலகம் என்ற விசேட கருத்தரங்கின் முக்கிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் இதனை குறிப்பிட்டுள்ளார். இந்த மாநாடு ஹொங்கொங்கில் நடைபெற்றது.

தி இக்கோனோமிஸ்ட் சஞ்சிகையின் நிறைவேற்று நெறியாளர் டேனியல் பிரேங்களின் வழிநடத்திய இந்த முக்கிய கலந்துரையாடலில் மேலும் கருத்து வெளியிட்ட பிரதமர்,

இலங்கையின் முக்கிய வலிமையான பூகோள அமைவிடம் மற்றும் மனித வளத்தின் கூடிய பயனைப் பெற்றுக் கொள்வதற்காக திட்டங்களை உருவாக்கி வருகிறோம். நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையான அரசியல் மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறோம்.

2020ஆம் ஆண்டளவில் நாட்டின் மனித வளத்தில் பெண்களின் பங்களிப்பை 40 வீதமாக அதிகரிக்கவும் பிரதேச மற்றும் மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## நூற்றாண்டு விழா மலருக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

காரைநகர் சைவமகா சபையின் நூற்றாண்டு விழா அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவுள்ளது. இவ்விழாவை முன்னிட்டு சபையின் ஆவணப் பதிவாகச் சைவத்தமிழ், ஆன்மீக, அறநெறி, மனிதநேயச் சிந்தனைகளைத் தாங்கிய நூற்றாண்டு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இம் மலருக்கான ஆக்கங்கள் யாவும் சைவ சமூகத்தின் மேன்மைக்கும் இக்கால நடைமுறை விடயங்களை நாயன்மார் அருளாளர்களின் கருத்துக்களோடு தொடர்புபடுத்திச் சமூகத்தை நல்வழிப்படுத்தும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.

இந்த ஆக்கங்களை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கா.குமாரவேலு, பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வீரமங்கை யோகரத்தினம் ஆகியோரிடம் ஒப்படைக்கலாம் என்று சபையினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்த பிள்ளையான்



பிள்ளையான் என்று அழைக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் எதுவும் இன்றித் தன்னை ஒரு வருடமாக தடுப்புக் காவலில் வைத்துள்ளமை தனது அடிப்படை மனித உரிமையை மீறும் செயலாகும் என பிள்ளையான் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை வழக்கு தொடர்பில் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் பிள்ளையான் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கருணாவின் பிணை மனுவை 5 ஆம் திகதி பரிசீலிக்கலாம்

## கொழும்பு நீதவான் தெரிவிப்பு

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் சார்பில் அவரது சட்டத்தரணியால் சமர்ப்பிக்கப்பட்ட பிணை கோரிக்கையை எதிர்வரும் 5ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது எனக் கொழும்பு நீதவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சிறையில் தனது கட்சிக்காரரான விநாயகமூர்த்தி முரளிதரனின் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை உள்ளதாக நீதிமன்றில் கூறிய அவரது சட்டத்தரணி, இதனால் அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரினார்.

சர்சைக்குரிய வாகனத்தை பெற்றுக்கொள்ளும்படி ஜனாதிபதி செயலகத்திற்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அது குறித்து அவர்கள் கவனம் செலுத்தவில்லை எனவும் சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிடிய, அந்த விடயம் குறித்து ஜனாதிபதி செயலகத்தின் தகவல்களை உறுதிப்படுத்தி தெரிவியுங்கள் எனப் பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டார்.

இதன்படி, பிணை விண்ணப்பத்தை 5 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறும் அன்றைய தினம் பிணை வழங்குவது குறித்து தீர்மானிப்பதாகவும் நீதவான் கூறினார். (ம)

## காஸ்ட்ரோவுக்கு அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம் டிசெ.02 நாட்டு மக்களுக்காகப் போராடிய கியூபா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் இறப்பிற்கு இரங்கல் தெரிவிக்கும் அஞ்சலிக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்கல் 3.30 மணிக்கு யாழ்.பொது நூலகத்தின் உணவக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சோ.தேவராஜா தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் அஞ்சலி உரைகளை சி.கா.செந்திவேல், க.தணிகாசலம், கா.கதிர்காமநாதன், த.ஸ்ரீபிரகாஸ், ச.தனுஜன் ஆகியோர் ஆற்றுவர். (இ-7)

# மஹிந்தவுக்குக் கிடைக்கும் அரச சலுகைகள்

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

அரசு சலுகைகள் வரப்பிரசாதங்களை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கி வருவதனால், வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அவர் பங்கேற்கவில்லை என ஜே.வி.பி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

வரவு செலவுத்திட்டத்துக்கு எதிராகவும், நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனைக்கு எதிராகவும் மஹிந்த வாக்களிக்கவில்லை என ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசும் முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்பதற்கு ஐந்து கோடி ரூபாவுக்கு மேல் ஒதுக்கீடு செய்துள்ளது.

மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்காது மஹிந்தவின் வீட்டைப் புனரமைப்பதற்கும் கட்டிட மொன்றை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் ஊடாக அரசுக்கும் மஹிந்தவுக்கும் இடையிலான ஒற்றுமை வெளிச்சமாகின்றது. இதற்கு முன்னரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மஹிந்தவின் வாகனங்களுக்கு புதிய டயர்களை போடுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தார்.

இவை அனைத்துமே சலுகைகள் வரப்பிரசாதங்களாகும்.

கடந்த அரசு ஆட்சிக் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலய மைந்துள்ள சிறிகொத்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு மஹிந்த நடவடிக்கை எடுத்திருந்தார்.

அந்த நன்றிக்கு பிரதி உபகாரமாக பிரதமர் ரணில் தற்போது மஹிந்தவுக்குச் சலுகை வழங்கி வருகின்றார் என விஜிதஹேரத்தெரிவித்துள்ளார்.

## பஸ்ஸில் பறிபோன 'பேர்ஸ்' கிடைத்தது; பணம் இல்லை!

யாழ்ப்பாணம்,டிசெ.03 மினி பஸ்ஸில் பயணம் செய்த பெண்ணிடம் இருந்து திருடப்பட்ட மணி பேர்ஸ் மறுநாள் வீதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை யாழ். பஸ் நிலையத்தில் இருந்து மாதகல் நோக்கிச் சென்ற மினி பஸ்ஸில் பயணம் செய்த மானிப்பாயைச் சேர்ந்த பெண்ணின் கைப்பை வெட்டப்பட்டு அதற்குள் இருந்த மணிபேர்ஸ் திருடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திருடப்பட்ட மணிபேர்ஸ் ஆனைக் கோட்டைப் பகுதியில் பிரதான வீதியில் வழிப்போக்கர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு அருகில் உள்ள தேநீர்க் கடையில் ஒப்படைக்கப் பட்டது.

இதையடுத்து மணிபேர்ஸ் அடையாள அட்டையிலிருந்த விலாசத்தின் படி உரியவரிடம் வழங்கப்பட்டது.

சொற்ப பணத்தை தவிர, வங்கிப் புத்தகங்களும் அடையாள அட்டையும் அதில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-59)

# பொலிஸாரின் கொடுப்பனவில் குளறுபடி

வவுனியா, டிசெ.03 வவுனியாவில் பணியாற்றும் பொலிஸார் சிலரின் ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவில் மேலதிகமாகப் பணம் அறவிடப்பட்டுள்ளது எனப் பொலிஸார் பலர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியாவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் பலர் பொலிஸ் திணைக்களத்தின் அனுமதியுடன் தமது மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்தே கடமைக்குச் செல்கின்றனர். இவர்கள் தமது வீட்டிலேயே உணவையும் பெற்றுக்கொள்கின்றனர்.

ஆனால், கடந்த ஒக்ரோபர் மாதத்துக்குரிய கொடுப்பனவில் வீட்டில் இருந்து உணவு கொண்டுவந்து சாப்பிட்டவர்களுக்கும், உணவு பொலிஸ் உணவகத்தில் இருந்து பெறப்பட்டது எனக் கூறிப் பலரிடம் கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளன. 1000 ரூபாய் தொடக்கம் 3000 ரூபா வரை இவ்வாறு கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சுமார் 100 வரையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என அறிய முடிகிறது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்குப் பணத்தை மீளப்பெற உதவ வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (இ-100)

# திருக்கோவில் வளங்களை காவுகொள்ளும் கடலரிப்பு

## அணைகளை விரைந்து அமைக்கக் கோருகிறார் கோடீஸ்வரன் எம்.பி.

அம்பாறை திருக்கோவில் பகுதியில் கடலரிப்பு காரணமாக பல நூற்றுக்கணக்கான காணிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனைத் தடுப்பதற்கு அணைகள் அமைக்கப்பட வேண்டியது அவசியம். இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்தன் கோடீஸ்வரன் இவ்வாறு வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதிஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கடலரிப்புக் காரணமாக பல தோட்டங்கள், மக்கள் வாழ்ந்த இடங்கள், மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த மதத் தலங்கள் என்பன காவு கொள்ளப்பட்டுள்ளன. இதனால் இந்தப் பகுதி மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.


இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு சரியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.


இதேவேளை கல்முனை



பிரதேசத்தில் நகர அபிவிருத்தித்திட்டம் என்ற போர்வையில் அதிகளவில் மண் நிரப்பப்படுகிறது. இதனால் வெள்ளம் வழிந்தோடிச் செல்வதற்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டுள்ளன. கல்முனைப் பிரதேசம் எதிர்காலத்தில் நீரில் மூழ்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.- என்றார். (ச)

# காத்தான்குடியில் உணவகம் முற்றாக எரிந்து நாசம்





மட்டக்களப்பு,டிசெ.03

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நூராணியா மையவாடி வீதியில் உள்ள உணவகம் ஒன்று தீப்பற்றி எரிந்து முற்றாக சேதமடைந்தது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் குறித்த உணவகத்தை உரிமையாளர் மூடிவிட்டுச் சென்றுள்ளார். இந்நிலையில் நள்ளிரவு 12.30 மணியளவில் உணவகம் தீப்பற்றி எரியத் தொடங்கியுள்ளது. அயலவர்கள் தீயை அணைக்க முயன்ற போதும் அது கைகூடவில்லை.

இதனால் உணவக உரிமையாளருக்கு சுமார் நான்கரை லட்சம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-ச)

# கல்லடி வாவியில் பொலிஸின் சடலம்





மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கல்லடி முகத்துவார வாவியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த திருபாலசிங்கம் சிவதாசன் (வயது47) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

கடந்த 26 ஆம் திகதி சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சம்பவ தினத்தன்று அங்கிருந்து காணாமல் போயிருந்தார். இந் நிலையிலேயே இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது (இ-ச)

# சட்டவிரோதமாக மண் ஏற்றிய மூவர் சிக்கினர்!

மட்டக்களப்பு,டிசெ.03

வாழைச்சேனை 'கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொத்தானை வயல் பகுதியில் சட்டவிரோமாக மணல் ஏற்றிவந்த டிராக்டரின் சாரதியும் மற்றும் இருவரும் கைது செய்யப்பட்டனர். டிராக்டரும் கைப்பற்றப்பட்டது.

இப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வது பற்றி பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ச)

# கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு புதிய கலாசார பீடாதிபதி நியமனம்

மட்டக்களப்பு,டிசெ.03

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைக்கலாசார பீடத்திற்குரிய புதிய பீடாதிபதி, கடமையை பெறுப்பேற்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கலைக்கலாசார கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பல்கலையின் கலைகலாசார பீட அவையின் தெரிவின் அடிப்படையில் புதிய பீடாதிபதியாக முனியாண்டி ரவி பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறை பட்டதாரியான முனியாண்டி ரவி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான கற்கைகள் துறைக்கான தலைவர், கல்வி பிள்ளை நலத்துறை பதில் தலைவர், அரபுத் துறை பதில் தலைவர், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், விளையாட்டு ஆலோசகர் சபையின் பணிப்பாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கான கலைக்கலாசார பீடத்துக்குரிய பீடாதிபதியாக கலாநிதி கந்தையா ராஜேந்திரம் கடமையாற்றியிருந்தார்.

# கிழக்கில் வெள்ளப் பெருக்கை தடுப்பதற்கான திட்டம் விரைவில்!

## நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா கூறுகிறார்

மட்டக்களப்பு மாவட்டத்தின் உறுகாமம் மற்றும் வடிச்சல் குளங்களை இணைத்து விவசாயத்தை மேம்படுத்தி வெள்ளப்பெருக்கைத் தடுக்கும் முகமாக பெரும் திட்டம் ஒன்று அடுத்த ஆண்டு தொடங்கப்படவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

இதன் அடிப்படையிலே மட்டக்களப்பின் பெரிய குளங்களில் ஒன்றான உறுகாமம் குளம் மற்றும் அதற்கருகே அமைந்துள்ள வடிச்சல் குளம் ஆகியன இணைக்கப்படவுள்ளன.

இவ்விரு குளங்களையும் இணைப்பதற்கான நீண்ட காலத் திட்டம் ஒன்றுக்காக இவ்வாண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஆரம்பத் திட்டவரைவு மற்றும் ஆய்வு வேலைகளுக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல நகரங்கள் மற்றும் வாகரை வரையிலான கிராமங்களிலுள்ள 5 லட்சம் குடியிருப்புக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்க முடியும்.

அத்துடன், இந்த மாவட்டம் எதிர்கொள்கின்ற வெள்ளப் பெருக்குப் பாதிப்புக்களை முற்றாகத் தடுக்க முடியும்.

குறிப்பாக ஏறாவூர் தொடக்கம் சித்தாண்டி வரையான மக்கள் எதிர்நோக்கும் வெள்ள நிலைமை சீர் செய்யப்பட்டு விடும் - என்றார்.

# பெண் தாக்கப்பட்டார்; இருவர் கைதாகினர்!


திருகோணமலை,டிசெ.03

கிண்ணியா பெரியாற்று முனையில் பெண் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு நடந்த இந்தச்சம்பவத்தை அடுத்து மாமன், மருமகன் ஆகிய இருவரே கைது செய்யப்பட்டள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான பெண் கிண்ணியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-ச)





*தனியார் பஸ் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்து நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்ட ஓட்டோ சாரதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். திருகோணமலை பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் நடைபெற்ற அந்த ஆர்ப்பாட்டத்தின் போது...*

காலைக்கதிர்
சனிக்கிழமை 03.12.2016



# அரச, தனியார் பஸ்கள் மீது தாக்குதல்!

கொழும்பு, டிசெ.03

நாடளாவிய ரீதியில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேளனம் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ள நிலையில் நேற்றைய தினம் சேவையில் ஈடுபட்டிருந்த அரச, தனியார் பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சம்மேளனம் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளதையடுத்து இலங்கை போக்குவரத்து சேவைக்கு சொந்தமான ஆறாயிரத்து 500 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதேவேளை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அரசாங்க பஸ்களில் 20 பஸ்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. மேலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸாரிடம் போக்குவரத்துச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, கேகாலை அவிசாவளை மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் பஸ்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.





அரசாங்கம் முன்வைத்துள்ள வரவுசெலவுத்- திட்டத்தில் முன் மொழிவுகள் மூலம் வாகன சாரதிகளுக்கும் வாகனங்களுக்குமான 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் மற்றும் வரிகள் தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்து தனியார் பஸ் மற்றும் முச்சக்கர வண்டி உட்பட 28 தொழிற் சங்கங்கள் நேற்று முன்தினம் இரவு முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் நேற்றுக் காலை சேவையில் ஈடுபட்டுள்ள சில தனியார் பஸ்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக, நீர்கொழும்பு நோக்கி கட்டுநாயக்க அதிவேக வீதியில் சென்ற பஸ் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதோடு, கேகாலை மற்றும் அவிசாவளை பகுதிகளில் பயணித்த தனியார் பஸ்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# மைத்திரிக்கு அமெரிக்கா அழைப்பு!

## தொலைபேசியில் உரையாடினார் புதிய துணை ஜனாதிபதி பென்ஸ்



கொழும்பு, டிசெ.03

அமெரிக்காவின் புதிய துணை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, மைக் பென்ஸ் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியிருப்பதுடன், அமெரிக்காவுக்கு வருமாறும் அழைப்பும் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய துணை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, மைக் பென்ஸ் நேற்று முன்தினம் முன்னிரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார்.

இதன்போது, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு இலங்கை ஜனாதிபதி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள், முன்னேற்றங்கள் குறித்து வரவேற்புத் தெரிவித்த மைக் பென்ஸ், இலங்கைக்கு எந்த உதவிகளையும் அமெரிக்கா வழங்கத் தயாராக இருக்கும் என்ற உறுதிமொழியையும் வழங்கியுள்ளார்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இந்த தொலைபேசி உரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்காக, அமெரிக்காவுக்கு வருமாறு ஜனாதிபதி மைத்திரிக்கு மைக் பென்ஸ் அழைப்பு விடுத்துள்ளார் என்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கையை விடுவிக்குமாறு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்புக்கு வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்த நிலையிலேயே அவருக்கு அமெரிக்காவிடம் இருந்து இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர்களின் வாகனங்கள் குறித்து வாராவாரம் அறிக்கை தேவை!

## பொலீஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, டிசெ.03

போக்குவரத்து விதிகளுக்கு கட்டுப்படாமல் பயணிக்கும் அமைச்சர்களின் வாகனங்கள் தொடர்பில் வாராந்த அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருப்பதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'கவனமாக சென்று வாருங்கள்' எனும் தேசிய வீதிப் பாதுகாப்பு நிகழ்ச்சிக்கு இணைவாக நடைபெறும் தேசிய வீதிப் பாதுகாப்பு வாரத்தைப்பிரகடனப்படுத்தும் நிகழ்வில் உரையாற்றும் போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லாத இந்தக் காலத்தில் முறை யின்றி பயணிக்கும் வாகனங்கள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பிலும் அவ்வாறான வாகனங்களில் பயணிப்பவர்கள் பிரமுகர்கள்தானா என்பது தொடர்பாகவும் கவனித்துப் பார்க்கவேண்டும்.

இந்த அறிக்கையைப் பொலிஸ் மா அதிபர் வழங்கியவுடன் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து உரிய தரப்பினரை வரவழைத்து தனிப்பட்ட முறையில் அவர்களுடன் கலந்துரையாடப் போவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# இலங்கையுடனான சுதந்திர வர்த்தக உடன்பாட்டை விரிவுபடுத்துகிறது இந்தியா

கொழும்பு, டிசெ.03

இலங்கையுடனான சுதந்திர வர்த்தக உடன்பாட்டை மேலும் விரிவுபடுத்துவது குறித்துப் பேச்சு நடத்துவதற்காக, இந்திய உயர் அதிகாரிகள் குழுவொன்று கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

இந்த மாத நடுப்பகுதியில் இந்தியக் குழு இலங்கைக்குச் சென்று பேச்சுக்களை நடத்தும் என்று புதுடில்லியில் இந்திய அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்பாடு, 2000ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையில் உள்ளது. இந்த உடன்பாட்டில், தனியே பொருள்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன.


இதில் சேவைகள் மற்றும் முதலீடுகளையும் உள்ளடக்குவது தொடர்பாக பேச்சு நடத்தவே இந்திய அதிகாரிகள் குழு இலங்கைக்கு வரவுள்ளது.

இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்பாடு, பொருள்களுக்கு அப்பால், சேவைகள், முதலீடுகள், தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஒக்ரோபர் மாதம் கூறியிருந்தார்.

2015-16ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கைக்கு இந்தியா 5.30 பில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்திருந்தது. எனினும், 0.75 மில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களையே இலங்கையில் இருந்து இந்தியா இறக்குமதி செய்தது.

தெற்காசியாவில் இந்தியாவின் பிரதான வர்த்தக பங்காளியாக இலங்கை விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜாலிய விக்ரமசூரியவின் விளக்கமறியல் நீடிப்பு!



கொழும்பு, டிசெ.03

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர் நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் கடந்த மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

2005ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையில் லொஸ் ஏஞ்சல்ஸுக்கான துணைத்தூதராக இருந்த அவர், பின்னர் அமெரிக்காவுக்கான தூதுவராக பதவி உயர்த்தப்பட்டிருந்தார்.

இந்த காலப்பகுதியில், தூதரக காரியாலய சீரமைப்புக்கான ஒப்பந்த வழங்கலுக்காக அவர் 2 லட்சத்து 45 ஆயிரம் டொலர்களை இலஞ்சமாக பெற்றுக் கொண்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மிக நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரயிலை மறித்து ஓட்டோ சாரதிகள் ஆர்ப்பாட்டம்

சிலாபம், டிசெ.03

சிலாபம் நோக்கி பயணித்த ரயிலை வழிமறித்து ஓட்டோ சாரதிகள் சிலர் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீர்கொழும்பு - குறணை பிரதேசத்துக்கு இடையில் காணப்படும் கல்கந்த எனும் இடத்தில் ஓட்டோ சாரதிகள் சிலர் ரயிலை வழிமறித்து இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிரான அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்னெடுத்து வரும் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே ஓட்டோ சாரதிகளும் இந்த எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# மாவீரர் குடியிருப்பு மக்களுக்கு வாழ்வாதாரமாக நல்லின ஆடுகள்

## அமைச்சர் ஐங்கரநேசன் வழங்கினார்



முல்லைத்தீவு மாங்குளம் - துணுக்காய் வீதியில் அமைந்துள்ள மாவீரர் குடியிருப்பு மக்களுக்கு வடக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சால் நல்லின ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் வடக்கு கால்நடை அபிவிருத்தித்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நல்லின யமுனாபாரி ஆடுகளை வழங்கினார்.

வடமாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சு பின்தங்கிய ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து அங்குவாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு நல்லின ஆடுகளை வழங்கும் தகர் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவீரர் குடியிருப்புப் பகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாவீரர் குடியிருப்பு மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக முதற்கட்டமாக 17 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 7 லட்சம் பெறுமதியில் இந்த ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவை கலப்பு இல்லாத யமுனாபாரி ஆடுகளாகும். இந்த ஆடுகளை இனவிருத்தி செய்து எதிர்காலத்தில் இப்பகுதியில் இருந்து வடக்கின் ஏனைய பகுதிகளுக்குத் தரமான யமுனாபாரிகளை விநியோகிக்கும் நோக்கிலும், இதன்மூலம் இக்குடியிருப்புமக்கள்கணிசமான வருவாயைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலுமே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.வசீகரனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தநிகழ்ச்சியின் முடிவில் மாவீரர் குடியிருப்புப் பகுதியில் நடுகை செய்வதற்கென மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஐ)

# தொடர்கிறது கடும் குளிர்

## சிறுவர், முதியோர் அவதானம் தேவை

### வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியாவில் அதிகப்படியான குளிர்கால நிலை காணப்படுவதால் சிறுவர் மற்றும் முதியோர்களை அவதானமாக இருக்குமாறு வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

நடா புயல் காலநிலையை அடுத்து வவுனியாவில் திடீரென கடும் குளிரான காலநிலை காணப்படுகிறது. பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டிய தேவையுள்ளது.

குறிப்பாக குளிரான சூழல் அமையப்பெறும் இடங்களில் இருந்து அகல்வது சிறந்தது. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் தமக்கு வைத்தியர்களால் வழங்கப்பட்ட மாத்திரைகளைச் சீராகப் பயன்படுத்த வேண்டும்.

சிறுவர்கள் தலைப்பகுதி உட்பட உடலை குளிரில் இருந்து பாதுகாக்கும் உடைகளை அணிவதுடன் குளிர்ப்பிரதேசத்தில் விளையாடுவது மழை நீரில் நனையாது இருப்பதிலும் அவதானம் செலுத்த வேண்டும்.

இதேவேளை சாதாரண குளிர் நீரை பொது மக்கள் பருகாது இளஞ்சூடான நீரைப் பருகுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-100)

# முல்லைத்தீவில் கரை ஒதுங்கும் புதுவகை மீன்கள்

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் முல்லைத்தீவுக்கடற்கரையில் புதுவகை மீன்கள் கரைஒதுங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்ட போதும் புதுவகை மீன்கள் கரையொதுங்கின என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுனாமி வரும் என்னும் அச்சம் பொதுமக்கள் இடையே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.(ஐ)

# 850 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, பாரதிபுரம்பகுதியில் 850கிலோகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தவரை வியாழக்கிழமை இரவு கைது செய்துள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரின் வீட்டில் மேற்கொண்ட சோதனையின் போது கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபரும்கைது செய்யப்பட்டார் என பொலிஸார் கூறினர். (ஐ)

# ஊற்றுப்புலம் ஒடுக்குப் பாலம் இடிந்து துண்டிக்கும் அபாயம்

## படகுப் பயணத்துக்கு ஏற்பாடு



கிளிநொச்சி,டிசெ.03

தற்போது நிலவி வரும் சீரற்ற கால நிலை காரணமாக ஊற்றுப்புலம் ஒடுக்கு பாலத்தின் ஊடான போக்கு வரத்து துண்டிக்கப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஊற்றுப்புலம் கிராமத்தில் அமைந்துள்ள ஒடுக்கு பாலத்திற்கு பதிலாக நிரந்தர பாலம் அமைக்கும் பணிகள் இந்த வருடம் நடுப்பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை மக்களின் தடையற்ற போக்கு வரத்துக்கு மாற்று ஏற்பாடாக தற்காலிகமாக ஒடுக்கு பாலம் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கான மண் அணைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து இலகுவாக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக பாலமும், மண் அணையும் உடைக்கப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக பாலம் உடைக்கப்படும் பட்சத்தில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களின் கிளிநொச்சி ஏனைய பிரதேசங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு தனித் தீவுக்குள் இருப்பது போன்ற நிலை ஏற்பட்டுவிடும்.

எனவே தான் இந்த நிலைமைகளை தவிர்க்கும் வகையில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.கார்த்திகேயன் ஆகியோர் நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டு படகுப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் பிரதேச மக்கள் அமைப்புகளுடன் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார். (இ-70)

# வவுனியாவில் எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வு







எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வும்கருத்தரங்கும் ஊர்வலமும் எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு வவுனியாவில்இடம்பெற்றன.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி பவானி பசுபதிராஜா தலைமை தாங்கினார்.

இதன்போது எயிட்ஸ் நோய் பரவும் முறைகள் மற்றும் அதனை தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக ஓட்டோ உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதன் பின் நகரில் ஓட்டோக்கள் மூலம் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றும் இடம்பெற்றிருந்தது.

இதேவேளை விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் தாய் சேய் நலன் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி ஜெயதரன், பாலியல் நோய் சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.சந்திரகுமார், பாலியல் நோய் சிகிச்சை நிலையப் பொது சுகாதார பரிசோதகர் து. சிவானந்தன் மற்றும் ஓட்டோ உரிமையாளர்கள், சாரதிகள், தாதியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-100)

# வவுனியாவில் ஓட்டோ தடம் புரண்டு விபத்து

## இருவர் படுகாயம்

வவுனியா, டிசெ.03

வவுனியா, ஹொரவப்பத்தானை வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹொரவப்பொத்தானைவீதியில் இருந்து கண்டி வீதி நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றை முந்திச்செல்ல முற்பட்ட வேளை வேகக் கட்டுப்பாட்டையிழந்து குடைசாய்ந்து தடம்புரண்டது. இதன்போது எதிரில் வந்த பேரூந்துடனும் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் ஓட்டோவில் பயணித்த நவநீதராசா (வயது45), மரியதாஸ் (65) ஆகிய இருவருமே படுகாயடைந்த நிலையில் வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளைவவுனியாபொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (ஐ-100)



இக்பால் அலி

# மாற்றுத் திறனாளிகளுக்கு நம்பிக்கை ஒளியூட்டும் சிவன் அறக்கட்டளை நிறுவனம்

இலங்கையில் சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் மாற்றுத் திறனாளிகள் நிலையம் மாற்றுத் திறனாளிகளுக்காக மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. ஐந்து வருடங்களில் எத்தனையோ சிறார் களுக்கு சிகிச்சையளித்து தம் சேவையை நிரூபித்துக் காட்டியுள்ளது.

இதன் கிளை நிறுவனங்கள் எட்டு இடங்களில் அமைந்துள்ளன. கண்டி, மாத்தளை, சித்தாண்டி, கேகாலை, யாழ்ப்பாணம், நெல்லியடி, திருகோணமலை, பன்விலை உள்ளிட்ட இடங்களில் அமைந்துள்ளன.

இந்த நிறுவனத்தின் இயக்குநரான கணேஸ்வரன் வேலாயுதம் அவர்களின் மகன் சிவன், லண்டனில் பிறந்தவர். இவருக்கு நடக்க முடியாது. வாய் பேச முடியாது. பார்க்க முடியாது. தம் மகனின் சிகிச்சைக்காக இலங்கை வருகை தந்த கணேஸ்வரன் வேலாயுதம், தமது பிள்ளையைப் போன்று கஷ்டத்தை எதிர் நோக்கும் பெற்றோர்களின் நன்மை கருதியும் மாற்றுத் திறனாளிகளின் நன்மை கருதி இலவச மருத்துவ சேவையை செய்து வருகின்றார்.

குறிப்பாகச் சிறு பராயத்தில் பாதிப்புற்ற சிறார்களுக்கான சிறந்த மருத்துவ சேவை வழங்குவதிலும் சித்த ஆயுள்வேத மருத்துவத் துறையின் பெறுமதியை உணர்த்தும் விடயத்தில் முதன்மையானவர் என்பதை இந் நாட்டு பல்லின மக்கள் நன்கறிவர்.

ஆஸ்திரேலியா நாட்டைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் சர்வதேச அமைப்பால் சர்வதேச மட்டத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட சிறந்த சமூகப் பணியாளர்களுக்கான சர்வதேச சமூக சேவை விருது இந்த நிறுவனத்தின் செயற்பாட்டாளர் கணேஸ்வரன் வேலாயுதத்துக்கு இம்முறை வழங்கினர். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையால் நடத்தப்பட்ட தெரிவில் தொண்டர் சேவை அமைப்புக்களில் இந்த நிறுவனமும் பத்துக்குள் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டமை முக்கிய அம்சமாகும். இவருடைய சேவைக்காக குறுகிய காலத்தில் பல சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர் மாற்றுத் திறனாளிகளுக்காக ஆற்றியுள்ள பணிகள் மகத்தானவை.

மாற்றுத் திறனாளிகளின் சிறுவர்களுக்கான சிகிச்சைகளும், கல்விப் போதனைகளும் தனித்துவமானவை. இவை பேச்சு மொழியிலும் பிள்ளை வளர்ப்பிலும் ஏன் உடலின் அங்கச்செயற்பாட்டிலும் ஏனைய சிறார்கள் வளர்ப்பு முறையிலிருந்து வேறுபட்டவை. இலகுவில் பேச்சு வழக்கை கொண்டுவரவோ இலகுவில் நடப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவோ இலகுவில் உண்ணப் பழக்கவோ பெரிய ளவில் கஷ்டங்களையும் மன வேதனையும் தாங்கிக் கொண்டு பெற்றோர்கள் செயற்பட வேண் டும். அதுவும் மாற்றுத் தினாளிக ளுக்கு ஏற்ற ஈர்ப்பான விடயங் களை மருத்துவ ஆலோசனையின் படி முன்னெ டுக்க வேண்டும். அவர்களின் உடல், உள அமைப் புக்கு ஏற்ப நேரத்துக்கு மட்டுப்படுத்தி பராமரிப்பில் ஈடுபட்டாலும் எதுவும் பயனளிக்கவில்லை என மனம்நொந்து போய் வீட்டில் நோய்க் குணத்தோடு அப்படியே வைத்திருப் போரும் உள்ளனர். ஆயினும் இவ்வாறு நம்பிக்கை இழந்து விரக்தியுற்ற நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுடைய பெற்றோர்களுக்குச் சிவன் அறக்கட்டளை நிதியத்தின் மாற் றுத்திறனாளிகள் நிலையத்தினர் கொஞ்சமளவு பேசமுடியாமல் வந்த குழந்தையை பேச வைப் பதிலும் கொஞ்சமளவு நடக்க முடியாது வந்து குழந்தை நடக்கவைப்பதிலும் பெரியளவில் சேவை செய்து வருகின்றனர். இப்படிப்பட்ட பிள்ளைகள் ஒவ்வொரு சிகிச்சை நிலையங்களிலும் கணிசமான அளவு பிள்ளைகள் மாற்றங்களைக் கண்டுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் கொழும்பு கண்டி பிரதான வீதியில் நெலும்தெனிய என்ற இடத்தில் அமைந்துள்ள சிவன் அறக்கட்டளை நிதியத்தின் வலது குறைந்தோர் நிலையத்தில் சுமார் 30 மேற்பட்ட சிறார்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இந்த வைத்திய சேவை முற்றிலும் இலவசமாக சிவன் அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதத்தால் இலவசமாக நடத்தப்படுகிறது.

இந்தச் சிறார்களுக்கு தனித்துவமான சித்த ஆயுள் வைத்திய சேவை நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் சித்த வைத்திய சேவையின் மூலம் அம்மா என்றதொரு வார்த்தை கூற முடியாமல் வந்த பிள்ளை அம்மா என்று இனிமையான மழலை மொழியில் கூறுவதைக் கேட்க முடியும். அதேவேளை சற்று எழுந்து நடக்க முடியாமல் வருகை தந்த குழந்தைகள் எழுந்து நடந்து மற்றக் குழந்தைகளுடன் குதூகலமாக விளையாடுவதை கேகாலையிலுள்ள சிவன் அறக்கட்டளை நிதியத்தின் வலது குறைந்தோர் நிலையத்தில் கண்டுகளிக் கலாம்.

இவ்வாறு சித்த ஆயுர்வேத வைத்திய சிகிச்சையின் பயனாக இரு குழந்தைககள் சமீபத்தில் நடக்கவும் பேசவும் முற்பட்டன.

அளவ்வ பகுதியைச் சேர்ந்த 9வயதுடைய கிம்ஹானி கவேஷா குமாரி 2015 -06-21 என்ற திகதியில் சிகிச்சைக்கு வந்த பிள்ளை 2016-06-21 தற்போது நடப்பதாகவும் பேசுவதாகவும் இந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிள்ளையின் தாயார் வி. ஜீவனீ இமாலி, தந்தை பிரதீப் குமார ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த பிள்ளையை இங்கு கொண்டு வரும் போது தூக்கிக் கொண்டும் இருவர் பிடித்துக் கொண்டும்தான் வந்தோம். தனியாக எழுந்து நடக்க முடியாது. பெரியளவு பேச முடியாது. வீட்டில் இருத்திய இடத்தில் இருக்கும் இங்கு வந்த பின்புதான் எழுந்து நடக்க முடிந்தது. பேச முடிந்தது. இந் தப் பிள்ளை இங்கு வரும் போது எட்டு வயது. இப்போ 9 வயது ஆகிறது. முன்னர் கொஞ்சம்தான் பேசுவார். இப்போது நடக்கிறது. நிறையக் கதைக்கிறது.- என்றனர்.

கேகாலை நெலின்தெனிய குருபட்டிய என்ற மூன்றரை வயதுடைய ஆர். ஆர். தீக்ஷன நதின் ரத்நாயக்க என்ற பிள்ளை சிவன் அறக்கட்டளை நிதியத்தின் வலது குறைந்த நிலையத்தில் 2015-04-24 ஆம் திகதி சிகிச்சைக்காக வந்தவர். 2016-06-02 ஆகிய திகதியில் தனியாக நடக்கவும் பேசவும் ஆரம்பித்துள்ளார்.

இந்தப் சிறாரின் தாயார் ஏ. சுனேத்திரா காந்தி கருத்துத் தெரிவிக்கையில்.-

நாங்கள் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் வந்தோம். வரும் போது பிள்ளை கையிலேதான் இருந்தது. எழுந்து நடக்க முடியாது. இப்போது தனியாக எழுந்து நடக்கிறது. அவருக்கு விசேடமாக சப்பாத்து செய்து தந்தார்கள். அந்தச் சப்பாத்து தற்போதும் போடுகின்றோம். முன்னர் அம்மா என்று மட்டும் தான் கூற முடியும். தற்போது கொஞ்சம் கூடுதலான வசனங்களுடன் பேசுகிறது. நாங்கள் எந்தச் செலவுகளும் செய்யவில்லை. எல்லாமே இலவசமாகத் தான் நடைபெற்றது. சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் கூடச் செல்ல வேண்டி இருந்தது. அந்தப் போக்குவரத்து முதற் கொண்டு அனைத்துச் செலவுகளும் இலவசமாகவே இவர்கள் மேற்கொண்டார்கள் என்றார்.

இது தொடர்பாக கேகாலை சிவன் அறக்கட்டளை நிதியத்தின் வலது குறைந்தோர் நிலையத்தில் தற்போது பணி புரியம் வைத்திய அதிகாரி ரோகினி பூபாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்-

சிவன் அறக்கட்டளை மூலம் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் விசேட தேவையுடைய குழந்தைகள் நலனுக்காக பாதுகாப்பு மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த வகையில் 2015.04.03 அன்று கேகாலை மாவட்டம் நெலும்தெனிய எனும் பிரதேசத்திலும் விசேட தேவையுடைய குழந்தைகள் நலனுக்கான பாதுகாப்பு மையம் ஆரம்பிக்கப் பட்டது. இந்தச் சிகிச்சை நிலையத்தின் வைத்திய அதிகாரி ஜெகதீஸ்வரன் பொறுப்பேற்று அவரது அயராத கனிவான சிகிச்சை மூலமும் பணியாளர்களின் ஒத்துழைப்புடனும் குழந் தைகளில் முன்னேற்றங்களைக் கண்டுவந்தார்.

இன்றுவரை 33 வரையி லான மழலைகள் சிகிச்சைபெற்று வருகின்றனர். வைத் திய அதிகாரி ஜெகதீஸ்வரனின் சிகிச்சைக் காலத்திலும் பல முன்னேற்றங்கள் கிடைத்தன. பெற்றோரின் திருப்திகளின் மத்தியில் முதன் முறையாகச் சிகிச்சைக்கு வந்த 9 வயதுடைய டின்கானி எனும் சிறுமி பிறப்பி லிருந்து நடக்கமுடியாத, கதைக்க முடியாத குழந்தை. சிகிச்சைக்குப் பின்னர் துணையின்றி நடந்தமை மனதில் மகிழ்வையும் நம்பிக்கையூட்டின என்று பெற்றோர் கூறினர்.

இக்குழந்தை நெலும் தெனிய குழந்தைகள் நலனுக்கான பாதுகாப்பு மையத்தில் 21.05.2015 இல் சிகிச்சை பெற வந்தது. இவருக் கான சிகிச்சை முறையை வைத்திய அதிகாரி வி. ஜெகதீஸ்வரன் வகுத்து சிறப்புற மேற்கொண்டதன் பயனாகவும் பெற்றோரின் அயராத கவனிப் பாலும் சிகிச்சை பெற வந்த இரு மாதங்களில் துணையின்றி நடக்க முடிந்தது. அவருக்குள்ள ஏனைய இயலாமைகளிலும் பூரண சுகம் எட்டப்பட இன்னமும் முயற்சி எடுக்கின்றோம். அவரில் முன்னேற்றங்கள் படிப்படியாகக் காணப்படுகின்றன. விசேட தேவையுடைய பாடசாலை வகுப்பில் தற்போது தனது கல்வியை சிறப்பாகத் தொடர்கிறது அந்த மழலை.

அதேபோன்று சிறுவன் தீக்சண மூன்றரை வயதிலிருந்து 03.4.2015 இல் இருந்து நெலும் தெனிய குழந்தைகள் நலனுக்கான பாதுகாப்பு மையத்துக்கு வந்திருந்தார்.

இவரும் பிறப்பிலிருந்தே மூளை செயற்றிறன் குறைபாடுடையவராகவே காணப்பட்டுள்ளார். நடக்க முடியாது. கதைக்க முடியாது. சாதாரண குழந்தைகளிலும் பார்க்க இயற்கை மீறிய சுறுசுறுப்பு அல்லது அவதானக் குறைவுமிகைஇயக்கமுள்ளவராகக் காணப்பட்டார். இவருக்குரிய முதற்கட்ட சிகிச்சை முறையை வைத்திய அதிகாரி வி.ஜெகதீஸ்வரன் மேற்கொண்டு வந்தார். குழந்தைகளின் தேவைகளுக்குரிய சார்பு உறுப்புக்கள் பெற்றுக் கொடுப்பதற்கான முன்மொழிவை வைத்திய அதிகாரி ஸ்தாபகரிடம் முன் மொழிய எந்த வித மறுப்புமில்லாது அவர் அதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்தினார்.

பின்னர் ஸ்தாபகர் கணேஸ் வேலாயுதத்தின் பெரும் ஒத்துழைப்புடன் விசேட தேவையுடைய அனைத்துக் குழந்தைகளும் யாழ்ப்பாணம் ஜெய்பூர் நிறுவனத்துக்கு 10.07.2015 பரிசீலனைக்காக அனுப்பப்பட்டனர். அவர்களின் சகல வசதிகளையும் ஸ்தாபகர் கணேஸ் வேலாயுதம் பொறுப்பெடுத்தார். இவர்களுள் 4 குழந்தைகள் முற்கட்ட சிகிச்சைக்காக உள் வாங்கப்பட்டனர். இக்கால கட்டத்தில் வைத்திய அதிகாரி ஜெகதீஸ்வரன் மேற்படிப்புக்காக இந்தியா செல்ல வேண்டி இருந்ததால் நெலும்தெனிய குழந்தைகள் நலனுக்கான பாதுகாப்பு மையத்தின் குழந்தைகளுக்கு சிகிச்சையை மேற்கொள்ளும் பொறுப்பை என்னிடம் வழங்கி சிறந்த ஆலோசனைகளையும் வழங்கிச் சென்றார்.

உண்மையை சொல்லப்போனால் சிட்டுக் குருவியின் தலையில் பனங்காய் வைத்தது போன்ற பொறுப்பை முதலில் உணர்ந்தேன். அங்கு சென்றதன் பின் அவ் குழந்தைகளின் வெள்ளந்தி உள்ளத்தைக் கண்டு பழகக் கிடைத்ததன் பின் மனதில் உத்வேகமும் பெற்றேன்.

ஸ்தாபகர் கணேஸ் வேலாயுதம் அவர்களின் அளப்பெரிய சேவையில் பங்கெடுக்க அரிய வாய்ப்பு கிடைத்ததையொட்டியும் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன் .06.12.2015 இலிருந்து இவர்களுக்குரிய சிகிச்சையைத் தொடர்ந்தேன். பின் தெரிவு செய்யப்பட்ட நான்கு குழந்தைகளுக்கான சார்பு உறுப்புக்கள் பொருத்துவதற்கான நாள் குறிக்கப்பட்டது. அந்தக் குழந்கைகளில் குழந்தை தீக்சணவும் ஒருவர் . 10.01.2016 யாழ்ப்பாணம் ஜெய்பூருக்கு இந்தச் சிறுவர்கள் அனுப்பப்பட்டார்கள். உறுப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின் சிறப்பான உடற்பயிற்சி முறைகள் மேற்கொண்டேன்.

சில புதிய தைலவகைகளின் தேவை ஏற்பட்டன. ஸ்தாபகர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இதற்கு மேலதிகமான பெற்றோரின் உத்வேகமான அயராத உழைப்பின் பயனாக பிறந்ததிலிருந்து நடக்க முடியாத அந்த சிறுவனும் கடந்த ஒரு மாதகாலமாக தனது நாலரை வயதில் உதவியின்றி நடப்பது மிகவும் மகிழ்வுக்குரிய விடயமாக காணப்படுகிறது. அத்துடன் அவரது செயற்பாடுகளிலும் பெரிதும் முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது.

(19 ஆம் பக்கம் பார்க்க)



19

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

பொன்.வேணு கிருஷ்ணா



## கியூபாவின் அதிபராக

கியூபாவின் அதிபராகப் பதவியேற்ற சில மாதங்களிலேயே காஸ்ட்ரோ அமெரிக்காவுக்கு வருகை தந்தார்.

இராணுவவீரர் அணிவதைப் போன்ற ஓர் உடை, இடது கையில் ஒரு புத்தகம், சுற்றிலும் பாதுகாப்பு வீரர்கள் - இப்படி பிடல் காஸ்ட்ரோ விமானத்திலிருந்து இறங்கியவுடனேயே பொதுமக்களும், பத்திரிகையாளர்களும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். ‘‘உங்களை மாஸ்கோவின் ஏஜண்ட்டாக நாங்கள் எண்ணவில்லை. ஆனால் உங்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களை சரமாரியாகக் கொல்கிறீர்களே, இதை எப்படி ஏற்க முடியும்?’’ என்று கேட்டார் ஒரு பத்திரிகையாளர்.

தாங்கள் தண்டிப்பதும் கொல்வதும் கொலைகாரர்களைத்தான் என்றும் அவர்கள் தனக்கெதிராக மட்டுமல்ல, நாட்டுக்கு எதிராகவும் செயற்பட்டவர்கள் என்றும் கூறினார் பிடல் காஸ்ட்ரோ.

‘‘கியூபாவில் உள்ள சர்க்கரைத் தொழிலகங்களை தேசியமயமாக்கி விடுவீர்களா? அங்குள்ள அமெரிக்காவின் மூலதனத்தை முடக்கி விடுவீர்களா?’’ என்று பறந்தது மற்றொரு கேள்வி.

பதில் சாமர்த்தியமாக வந்தது. ‘‘நீங்கள் நினைப்பது போன்ற கம்யூனிஸ்ட் அல்ல நான். அமெரிக்காவும், கியூபாவும் எதிரிகளுமல்ல’’ என்று காஸ்ட்ரோ கூற, மகிழ்ந்து போனது யு.எஸ்!. ஆனால் விரைவிலேயே இந்த உறவு முழுவதும் முறிந்து விழுவது போல் சம்பவங்கள் நடந்தன.

மாக்ஸிய, லெனின் பின்பற்றிய அரசியல் மற்றும் பொருளாதார செயல் முறையைத்தான் தாங்களும் பின்பற்றப் போவதாக காஸ்ட்ரோ அறிவிக்க, அதிருப்தியாளர்கள் உருவாகினர். அமெரிக்காவும் இந்த இயக்கத்துக்கு எதிர்நிலையை எடுத்தது.

## கோபத்தின் உச்சிக்கே போன அமெரிக்கா

கியூபாவில் இருந்த அமெரிக்கர்களுக்குச் சொந்தமான கரும்பு வயல்களைக் காஸ்ட்ரோ தேசியமயமாக்கியதில்தான் முதல் பெரிய பிளவு தொடங்கியது. காஸ்ட்ரோவின் இதுபோன்ற கம்யூனிஸ நடிவடிக்கைகளை எதிர்த்துக் கணிசமானவர்கள் கியூபாவை விட்டு வெளியேறினார்கள். யு.எஸ். சென்ற இவர்களில் சிலர், அமெரிக்க விமானங்களில் ஏறி, கியூபாவின் மீது வட்டமடித்தார்கள். ‘இதென்ன விளையாட்டு?’ என்று கியூபா மக்கள் வானத்தை வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தபோதே விமானத்திலிருந்து காகித மழை. அத்தனையும் காஸ்ட்ரோவுக்கு எதிராக அவரை திட்டி எழுதப்பட்ட பிட் நோட்டீஸ்கள்.

1961 ஏப்ரலில் அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.வினால் பயிற்சி கொடுக்கப்பட்டவர்கள் கியூபாவைத் தாக்கினார்கள். பிடல் காஸ்ட்ரோவின் ஆட்சியை அகற்றுவதுதான் இதன் நோக்கம். ஆனால் இவர்கள் வெற்றி நீடிக்கவில்லை. மூன்றே நாட்களில் கியூபா இராணுவம் இவர்களை அடக்கி விட்டது. இந்த அடக்குமுறைக்கு கியூபாவின் அப்போதைய பிரதமரான பிடல் காஸ்ட்ரோ நேரடிப் பொறுப் பேற்றார்.

அமெரிக்க உளவுத் துறையின் மூலம் அமெரிக்க அதிபர் ஐசன்ஹோவர், பிடல் காஸ்ட்ரோவை ஆட்சியிலிருந்து இறக்க பெரிய திட்டம் ஒன்றைத் தீட்டினார். இராணுவத்தில் உள்ள புரட்சிக் குழுக்களுக்கு அமெரிக்க உளவுத்துறை கடுமையான பயிற்சி அளித்தது. இதற்குள் அமெரிக்க தேர்தல் 1960இல் நடைபெற ஜோன் கென்னடி அங்கு அதிபர் ஆனார். இவரும் கியூபா முற்றுகைக்குத் தனது சம்மதத்தை அளித்தார்.

கியூபாவின் விமானத் தளங்களை தாக்கத் தொடங்கியது அமெரிக்கா. அது மட்டுமல்ல, அடுத்த சில நாட்களில் ஐரோப்பிய நாடுகள் கியூபாவுக்கு இராணுவ உதவி செய்வதையும் தடுத்து விட்டது யு.எஸ்!.

அமெரிக்காவுக்கும் கியூபாவுக்குமான விரோதம் அதிகமானது. காஸ்ட்ரோவின் அரசு, அமெரிக்கர்களுக்குச் சொந்தமான - எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களையும் தன் வசம் எடுத்துக் கொண்டது.

கோபத்தின் உச்சிக்கே போன யு.எஸ். கியூபாவிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொண்டது. உடனே, கியூபாவிலுள்ள அத்தனை வியாபாரங்களையும் அரசே சுவீகரித்துக் கொள்ளும் என்று அறிவித்தார் காஸ்ட்ரோ. கியூபாவுடனான தனது தூதரகத் தொடர்புகளை அறுத்துக் கொண்டது யு.எஸ்.

இந்த சமயத்தில் கியூபாவிலிருந்து வெளியேறிய அதிருப்தியாளர்கள் கியூபாவை முற்றுகையிட்டார்கள். இந்த முற்றுகைக்கு அன்றைய அமெரிக்க அதிபர் ஜோன் கென்னடியின் ஆசி இருந்தது. என்றாலும் இந்த முற்றுகையை வெற்றிகரமாக முறியடித்தார் காஸ்ட்ரோ.

அமெரிக்க எதிர்ப்பு, பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப் பின்மை இரண்டையும் கியூபாவால் வெற்றிகரமாகச் சமாளிக்க முடிந்ததென்றால் அதற்கு முக்கிய காரணம், சோவியத் யூனியன். மார்க்கெட் விலையை விட அதிக விலை கொடுத்து கியூபாவிடமிருந்து சர்க்கரையை வாங் கிக் கொண்டது. அது தன்னைப் போலவே கம்யூனிஸ்ட் ஆட்சி நாடு என்பதோடு அமெரிக்காவின் நேரடி எதிரி என்ற பாசம் வேறு. தவிர தடையில்லாத இராணுவ உதவிகளையும் செய்தது சோவியத் யூனியன்.

தனது இந்த நண்பனிடம் மற்றொரு உதவியையும் கேட்டுப் பெற்றது கியூபா. - அதுதான் சக்திவாய்ந்த ஏவுகணைகள். யு.எஸ். நடுங்கிவிட்டது. ‘உடனடியாக கியூபாவிடமிருந்து ஏவுகணைகளைச் சோவியத் யூனியன் திரும்பப் பெறாவிட்டால், போர்தான்’ என்றது. சோவியத் மௌனம் காக்க, சில நாள்கள் உலகமே பதட்ட நிலையில் ஆழ்ந்தது - வல்லரசுகளுக்கிடையே அணு ஆயுதப் போர் நடந்துவிடுமோ என்று!

கடைசியில், சோவியத் தனது ஏவுகணைகளைக் கியூபாவிடமிருந்து திரும்பப் பெற்றது. என்றாலும், பல்லாயிரக்கணக்கான தனது இராணுவ வீரர்களை கியூபாவிலேயே தங்க வைத்தது.

‘‘இவ்வளவு தூரம் பகை முற்றிவிட்ட பிறகு, நமது எல்லைக்குள் யு.எஸ்ஸின் கடற்படைத் தளம் மட்டும் எதற்கு? இது எங்கள் பாதுகாப்பிற்கே அபாயமாயிற்றே என்று முணுமுணுக்கத் தொடங்கினர் கியூபா மக்கள். யு.எஸ். இதைக் காதில் போட்டுக் கொள்ளக் காணோம்.

இதற்கிடையதோன் சோவியத் யூனியன் உடைந்தது. தானே பயங்கரமான பொருளாதார வீழ்ச்சியில் இருக்கும்போது அது கியூபாவை எப்படி தாங்கிக் காப்பாற்ற முடியும்? கியூபாவுக்கு அளித்து வந்த பல சலுகைகளை வேறுவழியின்றி நீக்கிக் கொண்டது ரஷ்யா. நாளடைவில் தன் இராணுவத்தையும் திரும்ப அழைத்துக் கொண்டுவிட்டது.

## ஏழை நாடாகியது கியூபா

சர்க்கரை ஏற்றுமதி மூலம் கிடைத்த பெரும் நிதியை தனது நாட்டின் கல்வி, இராணுவம் மற்றும் உடல் ஆரோக்கியத் துறைகளுக்குச் செலவழித்தது கியூபா.



இதன் காரணமாக உலகின் தலைசிறந்த சில பள்ளிகளும், மருத்துவமனைகளும் கியூபாவில் உருவாகின. தென்னாபிரிக்க இராணுவம் அங்குள்ள கறுப்பு மக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியபோது, கியூபாவின் இராணுவம் கறுப்பு மக்களை ஆதரித்தது.

ஆனால் கியூபாவில் பல உரிமைகள் பறிக்கப்பட்டன. அரசைப் பற்றியோ, பிடல் காஸ்ட்ரோ குறித்தோ பொது இடங்களில் விமர்சனம் செய்தால் கைதும், தண்டனையும் நிச்சயம் உண்டு என்ற நிலை இருந்தது. தங்கள் பேச்சுரிமை பறிக்கப்படுவதை விரும்பாத பலரும் அமெரிக்காவுக்குச் சென்றார்கள். பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் பிரதமராக 1959 முதல் 1976 வரையிலும், அதிபராக 1976 முதல் 2008 வரையிலும் பதவி வகித்தவர். 1991இல் நடைபெற்ற ஒரு நிகழ்வு அவரது தலைமைச் சிறப்பை கேள்விக் குறியாக்கியது.



1991இல் சோவியத் யூனியன் உடைந்தது. கியூபாவின் பெரும்பாலான ஏற்றுமதிகள் சோவியத் யூனியனுக்குத்தான். இந்த நிலையில் ஏற்றுமதியால் கிடைத்து வந்த நிதி கிட்டத்தட்ட நின்றுவிட்டது. சோவியத் யூனியன் கியூபாவுக்கு அளித்துவந்த பல சலுகைகளை நீக்கிக் கொண்டதோடு இ ராணுவத்தையும் கியூபாவிலிருந்து திரும்ப அழைத்துக் கொண்டுவிட்டது.

போதாக்குறைக்கு அமெரிக்கா சமயம் பார்த்து தனது பொருளாதாரத் தடைகளை கியூபாவின் மீது விதித்தது. காஸ்ட்ரோ பதவி இறங்கினால்தான் தடைகளை நீக்கிக்கொள்வோம் என்று வெளிப்படையாகவே அறிவித்தது அமெரிக்கா. 1990 களில் கியூபா மிக ஏழ்மையான நாடாகியது.

அதன்பின் கியூபாவின் பொருளாதாரம் மெல்ல மெல்ல மேலும் வீழ்ச்சி கண்டது. ஆயிரக்கணக்கானவர்கள் கடல்வழியாக அமெரிக்காவுக்குப் பிழைப்பைத் தேடி ஓடத் தொடங்கினர். 1980இல் ஒன்றேகால் லட்சம், 1994இல் முப்பதாயிரம் என்றெல்லாம் வகை தொகையில்லாமல் அகதிகள் வந்து சேரவே அமெரிக்கா இவர்கள் வருகைக்குத் தடைபோட்டது. தங்கள் நாட்டுக்கு வந்து கொண்டிருந்த கியூபா மக்களை அப்படியே கடலிலேயே வளைத்துப் பிடித்து கியூபாவில் உள்ள தங்கள் கடற்தளத்துக்கு திருப்பி அனுப்பத் தொடங்கிது அமெரிக்க இராணுவம்.

இடையே ஏலியன் என்ற ஆறு வயதுச் சிறுவன் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தான். கியூபாவிலிருந்து தப்பிக்கும் எண்ணத்தில் அங்கிருந்து ஏலியனை அழைத்துக் கொண்டு அவன் தாய் படகில் அமெரிக்காவுக்குக் கிளம்பினாள்.

அமெரிக்காவை நெருங்கும்போது படகு மூழ்க, அந்த விபத்தில் அந்த அம்மா இறந்துவிட்டாள். கடற்கரையோரமாக மிதந்து வந்த ஏலியனை சிலர் காப்பாற்றினர். பின்பு அவனை அமெரிக்காவில் வாழும் அவனது உறவினர்கள் அழைத்துச் சென்றார்கள்.

கியூபாவில் வசித்த ஏலியனின் தந்தை கியூபாவுக்குத் தன் மகன் திருப்பி அனுப்பப்பட வேண்டுமெனக் கூறினார். ஏலியனின் அமெரிக்க உறவினர்களோ அமெரிக்காவில்தான் முன்னேற்ற வாய்ப்புகள் அதிகம் என்பதால் ஏலியன் அங்கேயே இருக்க வேண்டும் என வாதிட்டனர். விஷயம் அரசியலாக்கப்பட்டது.

அமெரிக்க அரசு தலையிடாமல் மௌனம் சாதித்தது. ‘‘அமெரிக்க அரசு எங்கள் நாட்டுச் சிறுவனைக் கடத்திச் சென்றிருப்பதாகத்தான் இதற்கு அர்த்தம். ஏலியன் கியூபாவுக்கு அனுப்பப்படா விட்டால், அமெரிக்கா மீது போர் தொடுப்போம்’’ என்று காஸ்ட்ரோ கர்ஜிக்க, பெரும் விவாதங்களுக்குப் பின் ஏலியன் அவன் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டான்.

அரசியல் ரீதியாக காஸ்ட்ரோ தன் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொண்டாலும் கியூபாவின் பொருளாதார நிலைமை மிகவும் கவலைக்கிடமானது. இந்த நிலையில் சுற்றுலாப் பயணிகளை அதிகம் வரவழைப்பதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியுமா என முயற்சி செய்தது கியூபா. இதில் ஓரளவு வெற்றியும் கிடைத்தது.

(கேள்வி தொடரும்...)



# பழைமைக்கு எதிரான பண்பாட்டுப் புரட்சி

02

இருபதாம் நூற்றாண்டின் சீன வரலாறு மிகவும் சிக்கலானது; நீண்டது; மிகவும் கொந்தளிப்பானது. ஜப்பானின் ஆதிக்கப் பிடிக்குள் சிதைந்து கிடந்த சீனம், நிமிர்ந்து எழுந்து போராடி மிகவும் பலம் பொருந்திய பொதுவுடைமை சமூகமாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட ஒரு யுக வரலாறு. இப்படியானதொரு நீண்ட, புரட்சிகர நிகழ்வுகளைக் கொண்ட, சிக்கலான வரலாற்றுப் பின்புலத்தில் மூன்று பெண்களின் சுயசரிதம் பதியப்படுகிறது. தனது பாட்டி, தனது தாய், தன்னுடையதாக, மூன்று பரம்பரையை உள்ளடக்கி, தனது குடும்பத்தின் வாழ்வனுபவத்துடன் பின்னிப் பிணைந்து இந்த சுயசரித ஆக்கத்தைப் படைத்திருக்கிறார் நூலாசிரியர்.

எழுநூறு பக்கங்களைக் கொண்ட பெரிய நூல். நீண்டதொரு சமூக நாவல் போன்று கதை நகர்த்தப்படுகிறது. சீன சமூக வாழ்வில், அதில் இழையோடும் சமூக உறவுகளும், அந்த உறவுகளைத் தாங்கி வரும் பாத்திரங்களும், அந்தப் பாத்திரங்கள் வெளிப்படுத்தும் நுண்ணிய மன உணர்வுகளும், ஏக்கங்களும் மிகவும் நுட்பமாகச் சித்திரிக்கப்படுகின்றன. ஒரு தேசத்தின் வரலாற்றுப் பின்புலத்தில் ஒரு குடும்பத்தின் கதை சொல்லப்படும் பாங்கு சிறப்பாக அமைகிறது.

சீனப் பண்பாட்டுப் புரட்சி இந்த நூலின் மையமாக அமைகிறது. இந்தக் கலாசாரக் கிளர்ச்சி விளைவித்த அனர்த்தங்களையும்




> சீன சோசலிச நிர்மாணம் பற்றிய ஒரு பரந்த, தெளிந்த பார்வையுடன் யுங் சாங் இந்த நூலைப் படைக்கவில்லை. அவர் தனது குடும்பத்தின் சுவர்களுக்குள் நின்று தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் எழுதுகிறார். அந்த எழுத்தில் ஒரு புறம் ஆழமான சோகமும் மறுபுறம் வக்கிரமான கோபமும் தொனிக்கிறது. துயரம் தோய்ந்த வாழ்வனுபவமும், கனவுகள் உடைந்த விரக்தியும் அவருக்குக் கம்யூனிஸத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகிறது. அந்தக் கசப்புணர்வு சீனச் சமூகம் மீது திரும்புகிறது.

அதனால் சீனச் சமூகம் சந்தித்த அவலங்களையும் உண்மைச் சம்பவங்கள் வாயிலாக மிகவும் உணர்வு பூர்வமாக வரைந்து காட்டுகின்றார் யுங் சாங்.

காட்டுத்தீ போல பண்பாட்டுப் புரட்சி நாடெங்கும் பரவுகிறது. அதன் தீ நாக்குகள் யுங் சாங்கின் குடும்பத்தையும் தீண்டுகின்றன.

நூலாசிரியையின் தந்தை ஒரு கம்யூனிஸ்ட் உயர் அதிகாரி. நீண்ட, கடின உழைப்பால் உயர்ந்தவர். கெரில்லா வீரனாக ஆயுதமேந்தி தேசிய விடுதலைக்காகப் போரிட்டவர். கட்சியின் விசுவாசி. மாவோவைச் சீனத்தின் கடவுளாக வரித்துக் கொண்டவர். தாயாரும் ஒரு புரட்சிவாதி. கட்சிப் பிரமுகர். யுங் சாங்கின் குடும்பம் ஒரு கம்யூனிஸ்ட் குடும்பம். கம்யூனிஸ்ட் உயர் அதிகாரிகளையும் பண்பாட்டுப் புரட்சி விட்டுவைக்கவில்லை. யுங்சாங்கின் பெற்றோர்கள் மீது 'எதிர்ப்புரட்சியாளர்' எனக் குற்றம் சுமத்தப்படுகிறது. முதலில் தந்தையும், பின்னர் தாயாரும் கைதாகின்றனர்.

இரகசிய விசாரணைகளில் இழிவுபடுத்தப்பட்டு, கண்டனக் கூட்டங்களில் அவமதிக்கப்பட்டு, தடுப்பு முகாம்களில் வதைபட்டு, பெற்றோர்கள் கொடுமைக்கு ஆளாக யுங் சாங்கின் குடும்பம் சிதைகிறது. தாய் மனமுடைந்து நோயாளியாக, தந்தைக்குப் பைத்தியம் பிடிக்கிறது. இந்த அவலமான சூழ்நிலையில் செம்படையில் சேவையாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார் யுங்சாங். அந்த இளைஞர் பட்டாளம் நிகழ்த்திய அனர்த்தங்கள் அவரைத் திகைக்க வைக்கின்றன. தனிப்பட்ட சோகமும் சமூகத்தின் அவலமும் தன்னைச் சூழ, நிகழ்ந்து கொண்டிருக்கும் அராஜகமும் – எல்லாமே அபத்தமாக, அர்த்தமற்ற கேலிக்கூத்தாக அவருக்குத் தென்பட்டன.

கட்டுக்கடங்காத காட்டாறு போல சீற்றம் கொண்டு பாய்ந்த புரட்சி வெள்ளம் நாடெங்கும் பேரழிவை ஏற்படுத்தியது. இலக்கற்ற, நோக்கற்ற இளைஞர் வன்முறையால், எத்தனையோ அப்பாவிகள் பழிவாங்கப்படுகின்றனர். யுங் சாங்கின் கண்முன்னே இந்தக் கொடுமை நடக்கிறது. பழைமைவாதிகள் என்றும் துரோகிகள் என்றும் எதிர்ப்புரட்சியாளர் என்றும் முதலாளித்துவப் போக்காளர் என்றும் பிற்போக்குப் புத்திஜீவிகள் என்றும் பலர் வேட்டையாடப்பட்டு இம்சைப்படுத்தப்பட்ட சோக நிகழ்வுகளை அவர் மிகவும் உருக்கமாக எழுதுகிறார். பண்பாட்டுப் புரட்சி, மனிதர்களை மட்டுமன்றி, உடைமைகளையும் விட்டுவைக்கவில்லை. நூல்கள், சிற்பங்கள், ஓவியங்கள், அரும் பழம் பொருள்கள் என்ற வகையில் பழைமையைச் சித்திரித்த பண்பாட்டுச் சின்னங்கள் அனைத்துமே நாசமாக்கப்பட்டன. கலையம்சம் பொருந்திய பல புராதனக் கட்டடங்கள் கூட இடித்துத் தகர்க்கப்பட்டன. மாக்ஸிய நூல்கள், மாவோவின் எழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய படைப்புக்கள், பழம் பெரும் இலக்கியங்கள், தத்துவங்கள், சாஸ்திரங்கள், மேல்நாட்டு நூல்கள் எல்லாமே பண்பாட்டுப் புரட்சித் தீயில் பொசுக்கப்பட்டன எனக் கூறுகிறார் நூலாசிரியை. புத்தகங்கள் மலை மலையாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்ட கோரக் காட்சிகள் யுங் சாங்கின் ஆன்மாவைச் சுட்டுவிடுகின்றன. பண்பாட்டுப் புரட்சி, சீனக் கலாசாரப் பொக்கிஷங்களையே அழித்துவிட்டதாக அவர் மனம் வெந்து எழுதுகிறார். இந்தக் கோரத் தாண்டவத்தை நிகழ்த்திய சீனத் தலைமை மீது அவருக்கு கோபாவேசம் பொங்குகிறது. மாவோ மீது முழுப் பழியையும் சுமத்துகிறார்.

பண்பாட்டுப் புரட்சியைத் தொடக்கி வைத்தவர் மாவோ. அதனை இயக்கி வைத்து வரும் அவரே. எனவே, இந்தப் புரட்சியால் நிகழ்ந்த அராஜகம் அனைத்துக்கும் அவரே பொறுப்பாளர் ஆவார். மாவோ சாதிக்க விரும்பியது வேறு. ஆனால், நிகழ்ந்தது வேறு. அந்த நிகழ்வுகளை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. மிகவும் கட்டுப்பாடான கட்சி அமைப்புக்கு எதிராக, கட்டுப்பாடற்ற இளைஞர் சேனையைக் கட்டவிழ்த்து விட்டது அவர் புரிந்த மாபெரும் வரலாற்றுத் தவறு. கடிவாளம் அறுந்த குதிரை போல திசைமாறி ஓடியது செம்படை. அதனை நெறிப்படுத்த அவரால் முடியவில்லை. பழைமைவாத சிந்தனையைக் களைந்தெறிய மாவோ விரும்பினார் என்பது உண்மை. ஆனால், நூல்களை எரிக்கவோ அன்றி, பழைய பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கவோ அவர் உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஆனால் செம்படையோ, மாவோவின் பிரகடனங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு தான்தோன்றித்தனமாக நடந்தது. ஆயினும், அணைகளைக் கட்டாமல் வெள்ளத்தை ஓட விட்டது மாவோ இழைத்த தவறு.

சீன சோசலிச நிர்மாணம் பற்றிய ஒரு பரந்த, தெளிந்த பார்வையுடன் யுங் சாங் இந்த நூலைப் படைக்கவில்லை. அவர் தனது குடும்பத்தின் சுவர்களுக்குள் நின்று தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் எழுதுகிறார். அந்த எழுத்தில் ஒரு புறம் ஆழமான சோகமும் மறுபுறம் வக்கிரமான கோபமும் தொனிக்கின்றன. துயரம் தோய்ந்த வாழ்வனுபவமும், கனவுகள் உடைந்த விரக்தியும் அவருக்குக் கம்யூனிஸத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகிறது. அந்தக் கசப்புணர்வு சீனச் சமூகம் மீது திரும்புகிறது. செஞ்சீனத்தின் முகம் அவருக்கு அசிங்கமாகத் தென்படுகிறது. போராலும், புரட்சியாலும் கொந்தளிப்பான அரசியலாலும் சீர்குலைந்த ஒரு சமுதாயமாக அவர் சீனத்தைக் காண்கிறார். இந்தப் பார்வையின் அடிப்படையில் சீன வரலாற்றை ஒரு நீண்ட, முடிவில்லாத துன்பியல் நாடகமாக அவர் சித்திரிக்க முனைகிறார்.

ஆன்மாவை இழந்த மனிதர்களாக – எதற்கும் பணிந்து கொடுக்கும் பொம்மைகளாக – சீன விவசாயிகளை அவர் விவரிக்கிறார். இது மிகவும் தவறான கணிப்பு. ஓர் அபத்தமான பார்வை. சீன விவசாய வர்க்கமானது நவசீனத்தின் முதுகெலும்பு. ஜப்பானிய ஆதிக்கத்துக்கு எதிராக, சீனப் பிரபுத்துவக் கொடுமைக்கு எதிராக, தேச விடுதலை வேண்டிப் போரிட்ட மாபெரும் மக்கள் சக்தியை யுங் சாங் இழிவுபடுத்த முயல்வது அவரது முதிர்ச்சியற்ற பார்வையை எடுத்துக் காட்டுகிறது. நகரப்புற வாழ்வும் உயரதிகார வர்க்கப் பின்னணியும் இப்படியானதொரு தீட்சண்யமற்ற நோக்குக்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

சீனாவை ஒரு நரகமாகவும் மேற்குலகை ஒரு சுவர்க்கமாகவும் அவர் வர்ணிக்கிறார். மேற்குலகில் அழகான ஆடைகள் இருக்கின்றன. வாசிப்பதற்கு நிறையப் புத்தகங்கள் இருக்கின்றன. பார்த்து இரசிக்க பூக்கள் இருக்கின்றன. பொழுது போக்குக்குக் களியாட்டங்கள் இருக்கின்றன என்றெல்லாம் மிகவும் சிறு பிள்ளைத்தனமாக எழுதுகிறார். மேற்குலக நாகரிகம் உயர்ந்தது என்று சொல்கிறார். மேற்குலகில் பண்பு இருக்கிறது, அன்பு இருக்கிறது, வன்முறை அகன்ற மென்முறை இருக்கிறது, அமைதி இருக்கிறது, வர்க்க வேறுபாடற்ற சகோதரத்துவம் இருக்கிறது என்றெல்லாம் அவர் எழுதுவதைப் பார்க்கும் பொழுது வேடிக்கையாக இருக்கிறது. மேற்குலகில் நிலவும் சமூக முரண்பாடுகளையும், சீர்கேடுகளையும் வன்முறைகளையும் அவர் கண்டு கொள்ளாதமை வியப்பாக இருக்கிறது. அத்துடன், உலக காலனித்துவ வரலாற்றையும், இந்த நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றையும் அவர் செம்மையாகப் படிக்கவில்லை என எண்ணத் தோன்றுகிறது. சீனம் ஒரு பெரிய பூதம். ஆபத்தான பூதம். அதனை நிரந்தரத் தூக்கத்தில் வைத்திருப்பது அவசியம் என் மேற்குலகம் சீன மக்களிடையே அபின் போதையை ஊக்கு வித்த வரலாற்று நிகழ்வுகள் எதுவும் அவருக்குத் தெரியாது போல. குருட்டுத்தனமான மேற்குலக மோகம் நாட்டுப்பற்றை அவரிடம் மழுங்கடித்துவிட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே அவர் நாட்டை விட்டு ஓடி லண்டனில் தஞ்சம் புகுந்து இருக்கிறார். நாடு பெயர்ந்திருக்கும் அவருக்கு லண்டன் சுவர்க்கமாகத் தெரிகிறது போலும். அவரது இன்றைய சீமை அனுபவங்கள் எமக்குத் தேவைப்படா. ஆனால் அவரது அன்றைய சீன அனுபவங்கள் எமக்குப் பயன்தரக் கூடியவை. எனினும், மேற்குலகமும் திகைக்கும் வகையில் பொருளியப் புதுமைகள் படைத்து நவீன மயமாகி வரும் இன்றைய நவ சீனம் பற்றி அவர் அறியாதிருக்கின்றமை துரதிஷ்டவசமானது.

● (முற்றும்)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# நல்லிணக்கத்துடன் நாட்டை கட்டியெழுப்புவதே நோக்கம்

## இவ்வாறு கூறுகிறார் டலஸ் எம்.பி.



கொழும்பு, டிசெ.03

நல்லிணக்கத்துடன் கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே நோக்கமாகும் என்று தெரிவித்தார் ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். இதன் போது அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

21 மில்லியன் எனும் மிகக் குறைந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நாட்டில், தமிழ் - சிங்கள மொழிகளில் பேசத் தெரியாதோர் இருப்பது, வெட்கக்கேடான ஒரு விடயமாகும்.

நாட்டில் இதுவரை ஆட்சி செய்த அரசுகளிலேயே, இந்த அரசுதான் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் அதிகமாகப் பேசுகின்றது என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால், இந்த அரசில், தேசிய கலந்துரையாடல் அமைச்சுக்கு வெறும் 191 மில்லியன் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

சகவாழ்வுக்காக 12 மில்லியன் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இவை எப்படி போதுமானதாக அமையும்? சகோதர மொழியைப் பேசத் தெரியாமைக்கு, பாடசாலையோ அல்லது பெற்றோரோ காரணமல்ல. மாறாக 1948ஆம் ஆண்டில் ஆட்சி செய்த அரசுத் தலைவர்களே, அதற்குக் காரணம்.

டி.எஸ்.சேனநாயக்க ஆற்றிய சுதந்திரதின உரையின்போது தமிழ், சிங்களம் என இருமொழிகளும் அரசகரும மொழிகள் என்று கூறியிருந்தால், இந்தப் பிரச்சினை மட்டுமல்ல, நாட்டில் 30 வருடகாலமாக நிலவிய யுத்தம் கூட ஏற்பட்டிருக்காது.

ஆனால், மஹிந்த அரசு பல்வேறு தரப்புக்களின் எதிர்ப்பையும் மீறி நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வடக் கில் தேர்தலை நடத்தியது. அதன் போது, பலரும் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் பெரும்பான்மையாக வெற்றியடையும். எனவே, அவசரப்பட்டுத் தேர்தலை வைக்க வேண்டாம் என்று அமைச்சரவைக் கூட்டத்தின்போதே தெரிவித்தார்கள். எனினும், அவற்றுக்கெல்லாம் செவிசாய்க்காது எமது அரசால், தேர்தல் நடத்தப்பட்டது. எம்மைப் பொறுத்தவரை நல்லிணக்கத்துடன் கூடிய நாடொன்றைக் கட்டியெ ழுப்ப வேண்டும் என்பதே நோக்கமாகும்.- என்றார். (எ)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் 8 நாள்களாக தங்கியுள்ள சீனப் பிக்கு!



கொழும்பு, டிசெ.03

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் சீனாவைச் சேர்ந்த பிக்கு ஒருவர் கடந்த 8 நாள்களாகத் தங்கியுள்ளார் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

களனிப் பிரதேச பௌத்த விகாரையுடன் தொடர்புபட்டுள்ள மகாநாயக்க பௌத்த பல்கலைக் கழகத்துக்குச் செல்வதற்காகவே, அந்தப் பிக்கு இலங்கை வந்துள்ளார்.

களனியில் அமைந்துள்ள பௌத்த பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்துள்ள போதிலும், அவர்கள் மீண்டும் கட்டு நாயக்க விமான நிலையத் துக்கே அந்தப் பிக்குவை திருப்பி அனுப்பி வைத்துள்ளனர்.

இதுதொடர்பில் பௌத்த பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோது-

அந்தப் பிக்குமார் தங்கியிருப்பதற்குத் தேவையான கட்டட நிர்மாணிப்புப் பணிகள் பூர்த்தியடையவில்லை.

இதனால் சீன நாட்டுப் பிக்குவைத் தங்கவைப்பதற்கான வசதிகள் இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

சீனாவிலிருந்து இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுடன் பிக்குவை அனுப்பிவைக்க முயற்சித்த போதும், அவர் செல்ல மறுத்துள்ளார்.

அந்தப் பிக்கு சீன மொழியில் மாத்திரம் பேசுவதால், அவரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவது கடினமாக உள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## தினசரி ராசி பலன் 03.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 7.45 - 8.45 |
| | மாலை : 5.00 - 6.00 |
| ராகு காலம் | : 09.00 - 10.30 |
| குளிகன் | : 6.00 - 7.30 |
| எமகண்டம் | : 1.30 - 3.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் - கீழ்நோக்கு நாள்

**மேஷம்:** சோதனை - திடீர் சிரமங்கள், கவலைகள், சோதனை ஏற்படும் நாள்.

**ரிஷபம்:** உற்சாகம் - அனைத்துக் காரியத்திலும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படும் நாள்.

**மிதுனம்:** ஆக்கம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் எடுக்கும் அனைத்துக் காரியத்திலும் நிதானத்துடன் செயற்படவேண்டிய நாள்.
சந்திராஷ்டமம்: புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்

**கடகம்** : வரவு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் எதிர்பாராத வகையில் வரவுகள் வரும் நாள்.
சந்திராஷ்டமம்: புனர்பூசம் 4ஆம் பாதம்.

**சிம்மம்** : லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**கன்னி:** இரக்கம் - இன்று உங்களின் இதயத்தில் இரக்கம் ஏற்படும்.

**துலாம்:** விவேகம் - அறிவு மிளிர்ந்து செய்யும் செயல்களில் சிறப்புகள் கூடும்.

**விருச்சிகம்:** சிந்தனை - இன்று உங்கள் சிந்தனைகள் சிறந்து மிளிரும் அறிவு ஒளிரும்.

**தனுசு:** கீர்த்தி - உயர்ந்த பண்புகள் மனதில் பிரதிபலித்து நிலையான நிம்மதி ஏற்படும்.

**மகரம்:** கவனம் - எடுக்கும் காரியங்களில் சிறப்புக்கள் குறையும், ஆதலால் கவனத்துடன் இருக்க வேண்டிய நாள்.

**கும்பம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும் நாள்.

**மீனம்:** அமைதி - அமைதி நிறைந்து மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி காண்பீர்கள்.

# நத்தார் விழாவில் போலியான கொண்டாட்டங்களைத் தவிருங்கள்!

## இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.03

நத்தார் விழாவில், போலிக் கொண்டாட்டங்களைத் தவிர்ப்போம்என்றுகூறியுள்ளஇலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம், காலிமுகத் திடலில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பிரமாண்டமான நத்தார் மரம் தொடர்பிலும் தமது விமர்சனத்தை முன்வைத்துள்ளது.

நத்தார் விழா குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, ஒரு நம்பிக்கையின் கொண்டாட்டமே. வெளிப்புற கிறிஸ்மஸ் அலங்காரங்கள், உச்ச அளவில் விளம்பரப்படுத்தப்படும் போலித்தனமான களியாட்டங்கள் போன்ற செயற்பாடுகள், கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான விழுமியங்களைச் சாகடிக்கின்றன.

போலிக் களியாட்டத்துக்கு உடந்தையாக, காலிமுகத் திடலில் அமைக்கப்பட்டுவரும் இலங்கையின் உயர்ந்த நத்தார் மரம் குறித்து நாம் கவலையடைகிறோம்.

இந்த இராட்சத நத்தார் மரம் அமைக்கப்பட்டுள்ள இடம் குழப்பகரமானதும், அபாயகரமானதுமாய் உள்ளது.

இதன் ஆடம்பரமும், அலங்காரமும் துறைமுகப்பட்டின அபிவிருத்தியின் பின்னணியிலுள்ள மனித பாவத்தின் மேட்டிமையைச் சூழ்ச்சிகரமாக மூடி மறைக்கிறது.

இந்த அபிவிருத்தித் திட்டம் பல கேள்விகளுக் குப் பதிலளிக்க முடியாது இருக்கின்ற அதே வேளையில், எமது சுற்றாடலையும், எமது மக்களின் வாழ்வாதாரத்தையும், இடம் பெயரும் மக்களுக்கு மேலும் பல தாக்கத்தை ஏற்படுத்தும் என் பதை நாம் மறுக்கலாகாது. (எ)

## இலங்கை தம்பதிக்கு நியூசிலாந்தில் குடியுரிமை

கொழும்பு, டிசெ.03

இலங்கையைச் சேர்ந்த தம்பதியருக்கு நியூசிலாந்தில் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தத் தம்பதியின் குடும்ப உறுப்பினர்கள் இலங்கையில் செயற்படும் பாதாள உலகக் குழு உறுப் பினர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இலங்கையில் அந்தத் தம்பதியினருக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளமையால், அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழலை வெளிக் கொண்டு வர முயன்ற குற்றத்துக்காகவே பாதாள உலகக் குழுவினரால் தமது உறவினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள் ளனர் என்று தம்பதியர் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்த நியூசிலாந்து அரசு அவர்களுக்கான குடியுரிமையை வழங்கியுள்ளதாக ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.(எ)

# மீனவருக்குப் புதிய சலுகைகள்; விரைவில் தீர்மானம் எடுக்கப்படும்

## கடற்றொழில் அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.03

மீனவர்களுக்கான புதிய சலுகைகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவதற்கான 3 வகையான விசேட சட்டங்களை தாம் தயாரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சட்டவிரோத மீன்பிடி, மீனவர்கள் மீதான தடை உத்தரவு, முறைப்படுத்தப்படாத மீன்பிடி முறைகள் என்பன தொடர்பில் புதிய வகையிலான சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு முன் ஐரோப்பிய ஒன் றியத்துடனான கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

மீனவர்களுக்கு புதிய வகையிலான மீன்பிடிச் சாதனங்களை வழங்குதல், தொழிநுட்ப சக்தி வாய்ந்த டெப்லெட்களை வழங்குதல் என்பன தொடர்பாகவும் கடற்றொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

விரைவில் புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு வரும்-என்றார். (எ)

# ஒதுக்கப்படும் நிதிகள் அனைத்தும் மக்களிடம் சென்றடைய வேண்டும்

## *மீன்பிடி அமைச்சின் திட்ட மீளாய்வுக் கூட்டத்தில் டெனிஸ்வரன் தெரிவிப்பு*





யாழ்ப்பாணம்,டிசெ.03

மீன்பிடி அமைச்சால் ஒதுக்கப்படும் நிதிகள் அனைத்தும் மக்களிடம் சென்றடைய வேண்டும்.ஒரு சதமேனும் திரும்பிச் செல்லக் கூடாது.

இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனிஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்களுக்குமான 2016 ஆம் ஆண்டுக்கான திட்ட மீளாய்வும், 2017 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டமுன்வரைபுகள் தொடர்பான விசேட ஒன்றுகூடல் அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்பகல் 11.30 மணியளவில் யாழ்ப் பாணம் குருநகரில் உள்ள மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், அமைச்சின் பிரதம கணக்காளர் திருமதி அனந்தகிருஷ்ணன், ஆகியோரும் திணைக்களங்கள் சார்பாக வீதி அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் டி.சிவராஜலிங்கம், கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் ஜெ.ஜெ.சி.பெலிசியன், மற்றும் பிரதம பொறியியலாளர்கள், மாவட்ட நிறைவேற்று பொறியியலாளர்கள், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் திட்ட விரிவாக்கல் அதிகாரிகள், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கப்பட்ட சகல திட்டங்களதும் தற்போதைய நிலைகள் தொடர்பாக இதில் ஆராயப்பட்டது. குறித்த திட்டங்களில் இன்னும் நிறைவுறாத திட்டங்களது ஒப்பந்தக்காரர்களை அமைச்சர் நேரடியாக அழைத்து அவர்களது நிலைப்பாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

அனைத்து நிறைவுறாத திட்டங்களும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் நிறைவுசெய்து கையளிக்கப்படவேண்டும்என்று பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை தனது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் அனைத்தும் மக்களுக்கு சென்றடையவேண்டும் என்றும், அதில் ஒரு சதமேனும் திரும்பிச் செல்லாது என்றும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அத்தோடு எதிர்வரும் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் திட்டங்கள் தொடர்பான திட்ட முன்வரைபுகளும் முன்வைக்கப்பட்டு அவை தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. (ஐ)

## கரவெட்டியில் டெங்கு ஒழிப்பு புகையூட்டல்

கரவெட்டி, டிசெ.03

கரவெட்டி மேற்கு, நாவலர் மடத்தில் உள்ள வீடுகள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட பகுதிகளிலும் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்தசனிக்கிழமை டெங்கு நோயாளி ஒருவர் இப்பிரதேசத்தில் இனங்காணப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்தே கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் நெல்லியடி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவினரால் இப் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-32)

## அகண்ட தீபம் ஏற்றும் நிகழ்வு

கரவெட்டி கரணவாய் ஆதி பராசக்தி வழிபாட்டு மன்றம் நடத்தும் அல்லல் போக்கும் அகண்ட தீபம் ஏற்றும் நிகழ்வு எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் கரணவாய் மூத்த விநாயகர் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய .தினம் காலை 8 மணிக்கு அகண்டதீபம் ஏற்றி வைக்கப்படும். தொடர்ந்து இத்தீபத்துக்கு பக்தர்களால் எண்ணெய் ஊற்றி வழிபாடு செய்யப்படும். பிற்பகல் 4 மணி வரை அகண்ட தீபம் முறைப்படி குளிரவைக்கப்படும். (இ-30)

## பாரதியாரின் பிறந்ததின நிகழ்வில் அறிஞர் நெல்லை கண்ணன் பேருரை



யாழ்ப்பாணம், டிசெ.03

யாழ். இந்தியத் துணைத் தூதரகம் அமுதசுரபி கலா மன்றத்தினருடன் இணைந்து நடத்தும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 134 ஆவது பிறந்த தின நினைவு தினம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு, நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தாய் வாழ்த்து மற்றும் தமிழ்மொழி வாழ்த்துடன் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையை அமுதசுரபி கலாமன்றத்தின் அமைப்பாளர் பேராசிரியர் தி.வேல்நம்பி வழங்குவார்.

இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் சிறப்புரை ஆற்றுவார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழகத்தில் இருந்து வருகை தரும் தமிழ் அறிஞரும், பிரபல பேச்சாளருமான நெல்லை கண்ணன் கலந்து கொள்வார். நிகழ்வில் பிரதம விருந்தினர் பேருரை ஆற்றுவார். தொடர்ந்து நிகழ்வில் உள்ளூர்க் கலைஞர்கள் பாரதியார் கவிதைகளைக் கொண்ட சிறப்பு இசை நிகழ்வையும் வழங்குவர். (இ-7)

## யாழ். மாவட்டத்திலும் பசுமை நிகழ்ச்சித் திட்டம்

அடுத்த ஆண்டு யாழ் மாவட்டத்திலும் பசுமை நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஏதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மேற்படி திட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தத் திட்டமிட்டுள்ளது.

தேசிய ரீதியில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே யாழ்.மாவட்டத்திலும் இத் திட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது.

இத்திட்டத்தின்படி நாடு முழுவதிலும் உள்ள சுமார் பத்தாயிரம் கிராமங்களைத் தெரிவு செய்து அவற்றை பசுமைமிக்க கிராமங்களாக மாற்றி அமைப்பதே இலக்கு. இதற்கு அமைவாக ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொருத்தமான கிராமங்களைத் தெரிவுசெய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் தலா ஒரு கிராமத்தை தெரிவு செய்து இத்திட்டத்தை ஆரம்பிக்கும்படி யாழ் மாவட்ட செயலகம் கூறியுள்ளது. (ஐ-53)

## கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் சிலை திறப்பு, நினைவு நிகழ்வு

### *திங்களன்று வீரசிங்கம் மண்டபத்தில்*



யாழ்ப்பாணம் டிசெ.02

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் கூட்டுறவுப் பெரியார் வி.வீரசிங்கத்தின் உருவச்சிலை திறப்பு விழாவும்,52 ஆவது நினைவு தின நிகழ்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன், வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினராகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

பண்டத்தரிப்பு மகளிர் சி.க.கூ சங்கத்தினரின் கூட்டுறவுக் கீதத்துடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபையின் பணிப்பாளர் செ.மகேஸ்வரனும், நினைவுப் பேருரையை யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் மு.கௌரிகாந்தனும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து கூட்டுறவாளர் கௌரவிப்பும், பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (இ-7)

## கலை இலக்கிய வட்ட கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.03

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் முப்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய 'பண்பாட்டு விழுமியங்களையும் காப்போம்' கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. விவரம் வருமாறு:-

முதலாமிடம் : யே.பமினா கிறிஸ்ரியன், மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு.

இரண்டாமிடம் : செ.டிலக்ஷனா, 8ஆம் வட்டாரம், மண்டைதீவு.

மூன்றாமிடம் : ஜோ.லிண்டா, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

பாராட்டுப் பெறுவோர் :- அன்ரன் யோகதாஸ், அம்பன் அமெரிக்க மிஷன், செம்பியன்பற்று வடக்கு, தாழையடி., பத்மசேனன் பாலசுதன், முழங்காவில் மகா வித்தியாலயம், பல்லவராயன் கட்டு, முழங்காவில்., எஸ்.அறோட், புனித கிளாரட் குருமடம், நீர்கொழும்பு., அ.டினேஸ், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்., மேரி அபிஷா அன்ரன் அருள்ராஜ், நெடுந்தீவு மகா வித்தியாலயம், வானதி செங்கதிர்செல்வன், இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம், சிவபாலு வேணுஜா, மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.

## பேச்சுக்காக பாகிஸ்தான் பிச்சை கேட்கவில்லை

### இந்தியாவுக்கான பாக்.தூதுவர் காட்டம்

டில்லி, டிசெ.03

பேச்சுக்காக பாகிஸ்தான் பிச்சை கேட்கவில்லை என்று இந்தியாவுக்கான அந்தநாட்டு தூதர் அப்துல் பாசித் தெரிவித்தார்.

அமிர்தசரஸில் நடைபெற உள்ள ஆசியாவின் இதயம் மாநாட்டில் பங்கேற்பதற்காக, பாகிஸ்தான் பிரதமரின் வெளியுறவுத் துறை ஆலோசகர் சர்தாஜ் அஜிஸ் நாளை இந்தியா வரவுள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத் தாக்குதலை பாகிஸ்தான் முறித்தால் மட்டுமே பேச்சு என்று இந்தியா திட்ட வட்டமாகக் கூறிவிட்டது.

இதற்கிடையே இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பாகிஸ்தான்



பேச்சுக்கு பிச்சை கேட்கவில்லை என்று கூறி உள்ளார். பேச்சை எப்படி முன்னெடுப்பது என்பது இரு தரப்புக்கும் சவாலானது. பாகிஸ்தானைப் பொறுத் தவரையில் பேச்சை முன்னெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. காத்திருப்பதற்கு நாம் பெருமையைக் கொண்டு உள்ளோம். அமிர்தசரஸில் அவர்கள் (இந்தியா) தடையை உடைக்கவில்லை என்றால் மற்றொரு வாய்ப்புக்காகக் காத்திருப்போம். இந்தியாவுடன் பேசுவதையே விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பாகிஸ்தானுடன் பேச்சுக்கு இடமில்லை

### திட்டவட்டமாக அறிவித்தது இந்தியா

டில்லி, டிசெ.03

பயங்கரவாதத் தாக்குதல்கள் நீடித்து வரும் நிலையில் பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த முடியாது என்று இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அப்பாவி மக்களுக்கு எதிராகவும் இராணுவ முகாம்களைக் குறி வைத்தும் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அவற்றுக்கு சமீபத்திய உதாரணமாக ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நக்ரோட்டா பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீதான தாக்குதல் அமைந்துள்ளது.

இந்நிலையில், வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப், டில்லியில் செய்தியாளர்களை வியாழக்கிழமை சந்தித்தார். அவரிடம், பஞ்சாப் மாநில அமிர்தசரஸில் இன்றும் நாளையும் நடைபெற உள்ள ஆசியாவின் இதயம் மாநாட்டின்போது பாகிஸ்தானுடன் இரு தரப்புப் பேச்சு நடைபெறுமா? என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இருதரப்புப் பேச்சு நடத்துவதற்குப் பாகிஸ்தானிடம் இருந்து எமக்கு எந்த ஒரு வேண்டுகோளும் முன்வைக்கப்படவில்லை. இந்தியா எப்போதுமே பேச்சுக்குத் திறந்த மனதுடன் தயாராகவே இருந்து வந்துள்ளது. ஆனால், தொடர்ச்சியாக பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில், பேச்சு நடைபெற முடியாது.

இருதரப்பு உறவில் தொடர்ச்சியான பயங்கரவாதம் என்பதுதான் புதிய இயல்பு நிலை என்று இந்தியா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

நக்ரோட்டா பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விரிவான தகவல்களைப் பெறுவதற்காக மத்திய அரசு காத்திருக்கிறது.

அதன்பின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் முடிவெடுக்கப்படும். - என்றார்.

## விடுதலைகோரி பேரறிவாளன் மத்திய அரசுக்குக் கடிதம்



சென்னை, டிசெ.03

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 26 ஆண்டுகளாக சிறையில் உள்ள பேரறிவாளன் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி மத்திய அரசுக்குகடிதம் எழுதியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில், நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் உட்பட 7 பேர் சிறையில் உள்ளனர்.

கடந்த 26 ஆண்டுகளாக சிறையில் உள்ள அவர்களின் விடுதலை இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது.

மேலும், மத்திய அரசும் மாநில அரசும் அவர்களின் விடுதலை விடயத்தில் சற்று மெத்தனமாகவே நடந்து கொள்கின்றன என்ற குற்றச்சாட்டும் பரவலாக இருந்து வருகிறது.

இந்த நிலையில், பேரறிவாளனின் தாய் அற்புதம் அம்மாள் பேரறிவாளனை விடுதலை செய்ய வேண்டும் என்று தொடர்ந்து சட்டப்போராட்டத்தை நடத்தி வருகிறார்.

பேரறிவாளனும் மாநில அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார். எனினும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்று கூறி அனைத்து நடவடிக்கைகளும் கிடப்பில் இருக்கின்றன.

இந்த நிலையில், தன்னைவிடுதலைசெய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு பேரறிவாளன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பேரறிவாளன் அனுப்பியுள்ள அந்தக் கடிதத்தை உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ளது.

அண்மையில், வேலூர் சிறையில் இருக்கும் போது, சக கைதி ஒருவரால் பேரறிவாளன் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஹிமாசலம் உத்தரகண்டில் நிலநடுக்கம்

ஹிமாசலப் பிரதேசம், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அடுத்தடுத்து நில நடுக்கம் நேரிட்டது.

இதுதொடர்பில் தேசிய புவியியல் ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியவை வருமாறு:-

உத்தரகண்டில் உள்ள இந்திய-நேபாள எல்லையில் நேற்று முன்தினம் இரவு 10.22 மணியளவில் மிதமான நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.2 ஆக பதிவாகியது. முன்னதாக, ஹிமாசலப் பிரதேச மாநிலம், குலு பிராந்தியத்தில் வியாழக்கிழமை மாலை 4.12 மணியளவில் மிதமான நிலநடுக்கம் உணரப் பட்டது. அது ரிச்டர் அளவுகோலில் 3.3 ஆக பதிவாகியது-என்றார்.

இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## மீனவர் படகுகளை விடுவிக்குமாறு வேலை நிறுத்தம், ரயில் மறியல்

இராமேஸ்வரம், டிசெ.03

தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்கக் கோரி வேலை நிறுத்தம் மற்றும் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழக மீனவர் சங்க ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தமிழகக் கடலோர மீனவர் நலச்சங்க ஆலோசனைக் கூட்டம் இராமேஸ்வரம், தங்கச்சி மடத்தில் நடைபெற்றது.

இதில் இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள், மீனவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இலங்கைச் சிறையில் உள்ள 20 மீனவர்கள், 118 படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைக் கடற்படையினரால் சிறைப் பிடித்து கடலில் மூழ்கிச் சேதமான 18 படகுகளின் உரிமையாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

எல்லை தாண்டும் மீனவர்களின் படகுகளை சிறைப்பிடிப்பதுடன், அவர்களுக்கு ரூ.17 கோடி வரை அபராதம் வசூலிக்கப்படும் என்று இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கண்டனத்துக்குரியது.

கச்சதீவில் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் புனித அந்தோனியார் தேவாலயத் திறப்பு விழாவுக்கு தமிழக மீனவர்களையும், பத்தர்களையும் அனுமதிக்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. (எ)

## புதிய காற்றழுத்தத் தாழ்வு நாளை உருவாக வாய்ப்பு

டில்லி, டிசெ.03

தென்கிழக்கு வங்கக் கடலில் அந்தமானுக்கு தெற்கே நாளை புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகும் வாய்ப்பு உள்ளதாக டில்லியில் உள்ள இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கைக்கு அருகே உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை 'நடா' புயலாக மாறியது. அது திடீர் என்று வலுவிழந்து மீண்டும் காற்றழுத்த மண்டலமாக மாறி நேற்று அதிகாலை காரைக்கால் அருகே கரையைக் கடந்தது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அடுத்தடுத்து காற்றழுத்தத் தாழ்வு நிலைகள் உருவாகி சென்னை, கடலூர் ஆகிய பகுதிகளில் மழை பெய்து கடும் சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் நடா புயல் அச்சத்தை ஏற்படுத்தியது. ஆனால் திடீரென்று வலுவிழந்ததால் மக்கள் நிம்மதி அடைந்தனர்.

இந்நிலையில் தென்கிழக்கு வங்கக்கடலில் அந்தமானுக்குத் தெற்கே நாளை புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகும் வாய்ப்பு இருப்பதாக டில்லியில் உள்ள இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது.

இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலை தீவிரம் அடையுமா? எந்தத் திசை நோக்கி நகரும் என்பது தொடர்பில் வானிலை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். (எ)

## டில்லியில் கடும்பனி மூட்டம் விமானம், ரயில் சேவைகள் பாதிப்பு

டில்லி, டிசெ.03

பனிமூட்டம் காரணமாகத் தலைநகர் டில்லியில் விமான சேவை மற்றும் ரயில் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் கடந்த சில நாள்களாகவே, காலை மற்றும் இரவு நேரங்களில் அதிகமான பனி மூட்டம் காணப்படுகிறது. இதனால் பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். இந்தநிலையில் நேற்றுக் காலை ஏற்பட்டுள்ள பனி மூட்டம் காரணமாக, டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து விமானங்கள் புறப்படும் நேரம் மாற்றப்பட்டுள்ளது. அதேபோல, பன்னாட்டு விமானங்கள் அருகில் உள்ள சர்வதேச விமான நிலையங்களுக்கு மாற்றிவிடப்பட வாய்ப்பு உள்ளதாகவும் விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் தமிழக மீனவர் பங்கேற்க அனுமதி அளிக்குக

### வெளியுறவுத் துறைச் செயலருக்கு தமிழக அரசு கடிதம்

சென்னை, டிசெ.03

கச்சதீவு, புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் தமிழக மீனவர்கள் பங்கேற்க அனுமதி அளிக்க வேண்டும் என்று வெளியுறவுத் துறைச் செயலர் ஜெய்சங்கருக்குத் தமிழக அரசின் தலைமைச் செயலர் ராம மோகன ராவ் கடிதம் எழுதி உள்ளார்.

அந்தக் கடிதத்தில், அவர் கூறியுள்ளவை வருமாறு:-

கச்சதீவில் உள்ள புனித அந்தோனியார் தேவாலய பழைய கட்டடத்தை இடித்து விட்டுப் புதிய கட்டடம் கட்டிய போது, அதில் பங் கேற்க தமிழக மீனவர்கள் விரும்பினர். எனவே, புதிய கட்டடத்தை, இந்திய - இலங்கை அரசுகள் இணைந்து கட்ட வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியது.

இது தொடர்பாக கடந்த மே மாதம் 14 ஆம் திகதி, பிரதமருக்கு தமிழக முதல்வர் கடிதம் எழுதி னார். ஆனால் இலங்கை அரசு தமிழக மீனவர்களைப் புறக்கணித்து, புதிய கட்டடத்தைக் கட்டியுள்ளது. புதிய கட்டடத்தில், எதிர்வரும் 7 ஆம் திகதி திருவிழா நடைபெற உள்ளது. இதில், தமிழக மீனவர்கள், 100 பேர் பங்கேற்க விரும்புகின்றனர். இது, அவர்களின் உரிமை.

எனவே, அவர்கள் விழாவுக்குச் செல்ல, அனுமதி அளிக்க வேண்டும். அத்துடன் அவர்கள் சென்று வரத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து உதவ வேண்டும்.-என்றுள்ளது. (எ)

# முதன்முதல் மன்னிப்பு கோரினார் பான் கீ மூன்

## ஹெய்ட்டியில் கொலராவைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமைக்காக



நியூயோர்க், டிசெ.03

ஹெய்ட்டி நாட்டில் பரவிய கொலரா நோயைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதற்காக தனது பத்தாண்டு பதவிக்காலத்தில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் முதன் முறையாக நேற்று முன்தினம் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

கரிபியன் கடற் பகுதியை யொட்டி, வடஅமெரிக்கக் கண்டத்தில் அமைந்துள்ள நாட்டில் 2010 ஆம் ஆண்டு வரை 'கொலரா' எனப்படும் வாந்திபேதி நோயால் யாரும் பாதிக்கப்பட்டதில்லை. ஆனால், அதன் பின்னர் அங்கு சென்ற ஐக்கியநாடுகள் அமைதிப்படையில் இடம்பெற்றிருந்த நேபாள நாட்டு இராணுவ வீரர்கள் தாங்கள் பயன்படுத்திய குப்பைக் கழிவுகளை ஹெய்ட்டி நாட்டில் ஓடும் பிரதான ஆற்றில் வீசியதால் 2011 ஆம் ஆண்டு அங்கு கொலரா நோய் அதிகமாகப் பரவ ஆரம்பித்தது.

மிகக் குறுகிய காலத்தில் சுமார் 80 ஆயிரம் மக்களை கொலரா நோய் தாக்கியது. ஐ.நா.சபையின் அமைதிப்படையின் நற்பெயருக்கும் நோக்கத்துக்கும் களங்கம் கற்பித்துவிட்ட இந்தநோயைக் கட்டுப்படுத்தத் தவறிய வேளையிலும், இந்த நோயின்தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக சுமார் 20 கோடி அமெரிக்க டொலர்களை தொகுப்பு நிதியாகத் திரட்ட ஐக்கிய நாடுகள் சபை முனைப்புக் காட்டி வருகிறது.

இருப்பினும், உரிய நேரத்தில் இந்த நோயைக் கட்டுப்படுத்தத் தவறியமைக்காக ஐக்கிய நாடுகள் சபை வருத்தம் தெரிவிப்பதாகவும், ஹெய்ட்டி மக்களிடம் இதற்காக மண்ணிப்பு கேட்டுக் கொள்வதாகவும் ஐ. நா.சபை பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரி வித்துள்ளார். உலகின்தலைமை அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராகக் கடந்த பத்தாண்டுகளாக பான் கீ மூன் பதவி வகித்து வருகிறார். இந்த மாதத்துடன் அந்தப் பதவியில் இருந்து ஓய்வுபெறும் பான் கீ மூன் இதுவரை எதற்காகவும் மண்ணிப்புக் கேட்டதுகிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## பெருவில் மீண்டும் நிலநடுக்கம் பல்லாயிரம் வீடுகள் சேதம்



பெரு நாட்டில் மீண்டும் நேற்று முன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன.

பெருவின் வடமேற்கில் உள்ள அன்டெஸ் மாகாணத்தின் ஜுலியாக்கா நகரில் இருந்து சுமார் 77 கிலோமீற்றர் தூரத்தில் பூமிக்கு அடியில் சுமார் 3.5 கிலோ மீற்றர் ஆழத்தில், நேற்று முன்தினம் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் ரிச்டர் அளவில் 6.3 அலகுகளாக பதி வானதாக அமெரிக்க புவிசார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் காரணமாக அச்சமடைந்த ஜுலி யாக்கா நகர மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

மேலும் இந்த நிலநடுக்கம் காரணமாக அந்தப் பகுதிகளில் அமைந்துள்ள பல்லாயிரக் கணக்கான வீடுகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## வடகொரியா மீது மேலும் பொருளாதாரத் தடை

### ஜப்பான், தென்கொரியா நாடுகளும் அறிவிப்பு

டோக்கிகோ, டிசெ.03

ஐ.நா. சபையின் புதிய தடையை அடுத்து ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளும் வட கொரியாவின் மீது புதிய பொருளாதாரத் தடையை விதித்துள்ளன.

கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா, கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமலும், சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனை களை வட கொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

இதன்காரணமாக, வட கொரியாமீது ஐ.நா. பாதுகாப்புச் சபையும், அமெரிக்காவும் மிகக்கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எனினும் அந்த நாடு, தற்காப்பு என்ற பெயரில் தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை விடாமல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் ஐ.நா. சபை நேற்று முன்தினம் புதிய பொருளாதாரத் தடையை விதித்துள்ளது.

இதேவேளை வட கொரியாவின் எதிரி நாடான தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடு களும் வடகொரியா மீது புதிய பொருளாதார தடை விதிக்கப்படும் என்று அறிவித்துள்ளன. (எ)

## ஏரிக்குள் பாய்ந்தது பஸ்; 17 பேர் பலி!



சீனாவில் நேற்றுக் காலை பஸ் ஒன்று ஏரிக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 17 பேர் பலியாகினர்.20 பயணிகளுடன் புறப்பட்ட பஸ் ஒன்று எதிர்பாராத விதமாக ஏரியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. (எ)

## அமெரிக்காவில் காட்டுத் தீ இதுவரை 10 பேர் உயிரிழப்பு

### 200 ஏக்கர் நிலம் பாதிப்பு



நியூயோர்க், டிசெ.03

அமெரிக்காவின் டென்னிசி மாகாணத்தில் பரவி வரும் காட்டுத் தீயில் சிக்கி இதுவரை 10 பேர் பலியாகினர். ஆயிரத்து 200 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த மாகாண விவசாயத் துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் டென்னிசி மாகாணத்தில் காட்டுத் தீ பரவியது. அங்குள்ள காட்லின்பர்க், பிஜியின் போர்ஜ் ஆகிய நகரங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த 28 ஆம் திகதி காட்லின் பர்க் நகர காட்டில் அடையாளம் தெரியாத மர்மநபர் ஒருவரால் தீ பரவியது.

அந்தப்பகுதியில் கடுமையான வரட்சி நிலவியதால் தீ அணைக்க முடியாத அளவுக்கு தொடர்ந்து பரவி வருகிறது.

டென்னிசி மாகாணத்தில் பரவி வரும் காட்டுத்தீயில் சிக்கி இதுவரை 10 பேர் பலியாகி உள்ளனர். 45 பேர் காயம் அடைந்துள்ளனர். 700 கட்டடங்கள் சேதம் அடைந்துள்ளன. கடும் வரட்சி காரணமாக டென்சி மாகாணத்தில் இதுவரை 26 தடவைகள் காட்டுத் தீ பிடித்துள்ளது. ஆயிரத்து200 ஏக்கர் நிலம் பாதிக் கப்பட்டுள்ளதாக அந்த மாகாண விவசாயதுறைத் தெரிவித்துள்ளது. (எ)

## அலெப்போ மக்களுக்கு உதவ ரஷ்யா தயார்

மொஸ்கோ, டிசெ.03

அலெப்போவில் பாதுகாப்பான மனிதாபிமானப் பாதைகளைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் விவாதிக்க தான் தயாராக இருப்பதாக ரஷ்யா கோடிகாட்டியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த மனிதாபிமானப் பாதைகள் கிழக்கு அலெப்போவில் முற்றுகைக்கு உள்ளாகி இருக்கும் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருக்கும் பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்துகளை விநியோகம் செய்ய பயன்படலாம் என்று ஐநாதூதர் ஜோன் ஈக்லேண்ட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தற்போது அங்கு நிலவும் சூழ்நிலை மிகவும் பயங்கரமாக இருப்பதாகவும், மருத்துவ அறுவைச் சிகிச்சைகள் மயக்க மருந்துகளின்றி நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

## அமெ.பாதுகாப்பு இராஜாங்க செயலராக ஜேம்ஸ் மெட்டிஸ்



வொஷிங்டன், டிசெ.03

அமெரிக்கப்பாதுகாப்பு இராஜாங்கச் செயலாளராக ஜெனரல் ஜேம்ஸ் மெட்டிஸ் நியமிக்கப்படவுள்ளார்.

ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் ஒஹியோ பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இதனை பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

ஜேம்ஸ் மெட்டிஸ் பாதுகாப்பு இராஜாங்கச் செயலாளர் பதவிக்கு மிகவும் தகுதியான நபர் என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

மேட் டோக் (விசர் நாய்) என்று புனை பெயர் கொண்டு அழைக்கப்படும் ஜெனரல் ஜேம்ஸ் மெட்டிஸ், ஒபாமாவின் நிர்வாகத்தின் மத்திய கிழக்கு தொடர்பான கொள்கையை கடுமையாக விமர்சித்து வந்துள்ளார்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஈரான் நாடே பாரதூரமான அச்சுறுத்தலாக இருந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஜெனரல் மெட்டிஸ் 1991 ஆம் ஆண்டு வளைகுடா போரிலும் 2001 ஆம் ஆண்டு ஆப்கான் போரிலும் பங்கேற்றவர் என்று தெரியவருகிறது.

ஜெனரல் மெட்டிஸ், முஸ்லிம்கள் தொடர்பில் கடும்போக்கான நிலைப்பாடுகளைக் கொண்டவர் என்று கூறப்படுகிறது.

Aaruthal

# Aaruthal

## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்

## டிசெம்பர்-3



உலக மக்கள் அனைவரும் மாற்றுத் திறனாளிகளின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதுடன் அவர்களுக்கு மேன்மையும் உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தால் ஐ.நா.சபை உலகம் முழுவதும் பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் நாள் எனப் பிரகடனப்படுத்தியுள்ளது.




- மாற்றுத் திறனாளிகளுக்கு உங்கள் பேருந்துகளில் இருக்கையைக் கொடுங்கள். அது இரு கரம் நீட்டி வரவேற்பதற்குச் சமனாகும் உங்கள் பேரன்பு.
- மாடிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான நிகழ்வுகளை நடத்தும் அதிகாரிகளே அணுகு வசதியற்ற மாடிகளைத் தெரிவு செய்யாதீர்கள்.
- அங்கவீனர்களையும் மதிப்போம், மனிதமுள்ளவராய் இருப்போம்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டை வேலை வாய்ப்பில் மட்டுமல்ல மனங்களிலும் கொடுப்போம்.
- பேருந்து சாரதிகளே, ஏற்றும்போதும் இறங்கும்போதும் உங்கள் கருணையை எதிர்பார்த்துக் கலங்கி நிற்கும் மாற்றுத் திறனாளிகளின் மனங்களையும் கவனியுங்கள்.
- அவர்கள் வெண்பிரம்பு கையில் வைத்திருப்பது தங்களுக்காக அல்ல, கண் பார்வையுள்ள உங்களுக்காக!
- நாம் கண்ட உலகை கண் பார்வையற்றவர்கள் காண கண்தானம் செய்வோம்.
- விழிப்புலனற்றோர் வாழ்வில் வழிகாட்டும் வெண்பிரம்புடன் வருவோருக்கு வெள்ளை மனதுடன் உதவுங்கள்.



சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகள் அல்லது ஊனமுற்றோர் கருத்து நிலைபற்றி ஆறுதல் நிறுவனத்தைச் சேர்ந்த நாம் சில பதிவுகளை முன்வைக்க விரும்புகின்றோம்.

உலகின் மிகப் பெரிய சிறுபான்மையினர் மாற்றுத் திறனாளிகள் என உலக சுகாதார நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது. எமது நாட்டிலும் மாற்றுத் திறனாளிகளின் தொகை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. விசேடமாக வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற உள்ளூர் யுத்தத்தால் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஊனமுற்றோர் தொகை அதிகரித்துள்ளது.

போரில் ஈடுபட்ட இரு சாரார் இடையே வென்றவர்கள் பக்கத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு கௌரவங்களும் வாழ்வாதார வசதிகளும் அரசால் வழங்கப்படும் அளவுக்குப் போரில் தோல்வியுற்ற பகுதியினரைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு இத்தகைய கௌரவங்களும் வாழ்வாதார வசதிகளும் வழங்கப்படாமை துரதிஷ்டம் மட்டுமன்றி குரல் கொடுக்கப்பட வேண்டிய விடயமும் ஆகும்.

வடமாகாண சமூக சேவைகளின் தரவுகளின் பிரகாரம் எமது மாகாணத்தில் 2983 உளவளம் பாதிக்கப்பட்டோரும், 2396 விழிப்புலனற்றோரும், 2040 உடல் அங்கவீனமானோரும், 1176 வாய்பேச முடியாதோரும், 1479 செவிப் புலனற்றோரும், 834 முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோரும் வாழ்கின்றார்கள். இவர்களில் போராளிகளும் அடங்குவர். மாற்றுத் திறனாளிகள் பற்றியோ வாழ்விழந்த பெண்கள் பற்றியோ ஒரு முழுமையான மாகாணம் தழுவிய அறிவியல்மட்ட ஆய்வுகள் இதுவரையும் மேற்கொள்ளப்படாமை துரதிஷ்டமாகும். இருந்தபோதும் சமூகநலன் கொண்டு தனிப்பட்டவர்களும் சில அமைப்புக்களும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற எமது உறவுகளின் உதவியோடு ஊனமுற்றோருக்கான உதவி நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகிறார்கள், அவர்கள் பாராட்டப்படவேண்டியவர்களாவர்.

ஐம்புலன்களிலும் ஏதாவது ஒன்றின் குறைபாடு அல்லது ஐம்புலன்களுமே குறைபாடுகளுடன் வாழநேரும் கொடுமையான நிலைமைபோர்க் காயங்களுக்கு உட்பட்டவர்களுக்கு உண்டு. சுவாசிப்பதில்,கதைப்பதில்,பார்ப்பதில், உணர்வதில்,கேட்பதில்... என இன்னோரன்ன பாதிப்புக்களை மட்டுமல்ல, உடலில் உள்ள பாகங்கள் பலதிலும் தீராத வேதனையை அனுபவிக்கும் அங்கவீனர்கள் தொடர்பாக அரசும் சமூகமும் போதிய கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

முகத்தில் பாதியை வடுவாகக் கொண்டு இருப்போரால், தாம் வாழும் சமூகத்தில் முக மலர்ச்சியோடு மட்டுமல்ல அகமலர்ச்சியோடும் தலை நிமிர்ந்து வாழமுடியாது.

தோற்றுப்போன பிறரில் தங்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்களால் எவ்வாறு தன்னம்பிக்கையுடன் வாழமுடியும் என்று தம்மைத் தாமே அவர்கள் ஒதுக்கிக்கொள்கிறார்கள்.

ஒரு காலும், ஒரு கையும்,ஒரு கண்ணும் முழுதாக இல்லாமல் போனதோடு உண்ணவோ, பேசவோ சிரமப்படுகின்ற ஒருவருக்கு வாழ்வாதார உதவியாக மாட்டைக் கொடுப்பதும், தோட்டம் செய்யச் சொல்வதும் எவ்வளவு அபத்தமானது என்பதை ஆதரவாளர்கள் மட்டுமல்ல அரசும் உணரவேண்டும். பத்து ஏக்கர் விவசாயம் செய்யும் தகுதியுடைய கால் இழந்த ஒருவருக்குச் சிரட்டையில் அலங்காரப் பொருள்கள் தயாரிக்கக் கற்றுக்கொடுப்பதும், இரண்டு கைகளும் இல்லாத ஒருவருக்குப் பலசரக்குக் கடை போட உதவுவதும் நகைப்புக்கு இடமானதும் மனவருத்தத்துக்கு உடையதும் ஆகும்.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்காக உயிரிழை, பார்வையற்றவர்களுக்காக யாழ்.விழிப்புணர்வு அற்றோர் சங்கம் போன்று ஏனைய மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி மாகாண மட்டப் பொதுச்சங்கம் அதற்கான இல்லம் மற்றும் தொழில் வள நிலையம் என்பவை மிக மிக அவசியமானவையாகும்.

உடலிலும் உள்ளத்திலும் மாறாத காயங்களை உடைய, வடுக்களை உடைய, இழப்புக்களை உடைய மாற்றுத் திறனாளிகள் அவர்களது குடும்பத்தில் தம்மை ஒரு சுமையாக எண்ணிக் கொண்டு தங்கி வாழ்வதை விடவும் அவர்களை ஓர் இல்லத்தில் வைத்துப் பராமரிக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும். அவ்வாறான ஓர் இல்லத்தைப் பற்றிக் கதைத்துஅதற்கு நிதி ஒதுக்கி அதன் பின் கட்டடம் கட்டி, திறப்பு விழா செய்து கொண்டாடும் கனவுகளை விடுத்து,கரிசனை உள்ளவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.

போரினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் வசிப்பதற்காகவும் பராமரிக்கப்படுவதற்காகவும் பாடசாலைக்கல்வி,தொழிற்கல்வி, கலைக்கல்வி என்பவற்றைப் பெறுவதற்காகவும் என கிளிநொச்சியில் பல இல்லங்களை நடத்தியதுபோல மாற்றுத் திறனாளிகளின் இல்லத்தையும் நடத்துவதன் அவசியம் பலராலும் உணரப்படுகின்றது. குறிப்பாக அங்கவீனம் அடைந்த பெண்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி நிற்கிறது. பாதுகாப்பும் போதிய பராமரிப்பும் அற்றவர்களாகப் பெண்களே அதிகம் வாழ்கிறார்கள். போரில் அங்கவீனங்களுக்கு ஆளாகியவர்கள் தங்கி வாழ ஓர் இல்லம் அவர்களின் சொந்த வீடுபோல அமைந்தால், அவர்கள் தமது வடுக்களை மறந்து சிரித்து வாழ வழி கிடைக்கும் என்பது திண்ணம்.

புதிதாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களில் கட்டுமானத்திலும் வசதிகளை ஏற்படுத்துவதிலும் திட்டமிடலிலும் மாற்றுத் திறனாளிகளைக் கருத்தில் கொண்டு செயற்படுவதும் பொது இடங்களில் மாற்றுத் திறனாளிகள் ஏறக்கூடிய படிக்கட்டுகளையும்,மலசலகூடங்களையும், இருப்பிட வசதிகளையும் பிறர் அவர்களை மதிக்கும் வகையில் நடந்து கொள்வதற்கான குறியீட்டு முறை தொடர்பான விழிப்புணர்வையும் நமது சமூகத்தில் ஏற்படுத்துவது அவசியமாகிறது.

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமாகிய இன்று விசேடமாக வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற நாம் அனைவரும் ஒன்றிணைந்து இவர்களின் உரிமைகளை வழங்க முன்வருவோமாக என்ற அறைகூவலை ஆறுதல் நிறுவனம் முன்வைக்க விரும்புகின்றது.

**சுந்தரம் டிவகலாலா**
பிரதம நிறைவேற்று அதிகாரி,
ஆறுதல் நிறுவனம்.



- ஒருவரிடமுள்ள குறையை விட அவரிடமுள்ள திறமையைக் காண வேண்டும்.
- சாதிக்க நினைப்பவர்களுக்கு ஊனம் ஒரு தடையல்ல.
- உலகத்தில் சாதாரண மனிதர்கள் படைக்கும் சாதனையை விட மாற்றுத் திறனாளிகள் படைக்கும் சாதனைகள் ஏராளம்.
- பலவீனங்கள் எல்லாம் உடலுக்குத்தான், தன்னம்பிக்கைக்கு இல்லை.
- நாங்கள் மாற்றுத் திறனாளிகள் இல்லை; உலகத்தை மாற்றப் போகும் திறனாளிகள்.
- உடல் உறுப்பு குறைபாடு இருப்பினும் உள்ளம் உறுதியுடன் செயலாற்றினால் இந்த உலகை அளக்கலாம்.

(சி-087)

# 'இலங்கை எனக்கு சொர்க்கம்'




## வசிம் அக்ரம் புகழாரம்

கொழும்பு, டிசெ.03

'இந்தப் புவியில் எனது சொர்க்கபுரி இலங்கைதான்' என பாகிஸ்தான் கிரிக்கெட் மேதை வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் விருது விழாவில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ் விருது விழாவில் உரையாற்றும்போது வசிம் அக்ரம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''விளையாட்டரங்கிலும் அரங்கிற்கு வெளியேயும் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் பல்வேறு போட்டிகள் இடம்பெற்றன. பெரும்பாலானவை அரங்கிற்கு வெளியே இடம்பெற்றன. என்னைப் பொறுத்தமட்டில் எல்லாவற்றுக்கும் மேலாக நினைவில் நீங்காத ஓர் இடமாக இலங்கை திகழ்கின்றது.

இந்தப் புவியில் இலங்கை எனக்கு ஒரு சொர்க்கபுரியாகும். இந்த நாட்டை நாங்கள் முத்துத்தீவு என அழைக்கின்றோம்.

இம்ரான் கானின் தலைமையில் 1985 ஆம் ஆண்டு இலங்கைக்கு முதல் தடவையாக வருகை தந்தபோது றக்பியும் கால்பந்தாட்டமும் தான் இலங்கை விளையாட்டுத் துறையில் முன்னிலையில் இருந்தது. ஆனால், இரண்டு வருடங்களின் பின்னர் இலங்கையின் மூலைமுடுக்கெல்லாம் கிரிக்கெட் வியாபித்திருந்ததை காண முடிந்தது.

1996 உலகக் கிண்ண கிரிக்கெட், உலக இருபதுக்கு 20 கிரிக்கெட், சம்பியன்கள் கிண்ண கிரிக்கெட் ஆகியவற்றிலும் சம்பியனானதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இலங்கையின் வளர்ச்சி எத்தகையது என்பது புலப்படுத்தப்பட்டது.

இலங்கைத் தீவு தொடர்பில் நான் விரும்புவது என்னவென்றால், மக்கள் மத்தியில் நிலவும் தெளிவுதான். இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் புன்முறுவல் பூக்கும் முகங்களுடன் மகிழ்ச்சியாக காணப்படுகின்றனர்.

இங்கு வீதிகளில் நடமாடுவது அபாயமற்றது என்பதை நான் உணர்வதுடன் எனது இரண்டாவது சொந்த நாடாக நான் பார்க்கின்றேன்.

இந்த நாட்டை நேசித்த தன் மூலம் இலங்கையின் உத்தியோகப்பற்றற்ற தூதராக என்னை உயர்த்தி விட்டுள்ளது. இலங்கைக்கு விஜயம் செய்வதை தவிர்க்கக்கூடாது என நான் செல்லும் நாடுகளிலெல்லாம் மக்களிடம் கூறிவருகிறேன்.

முழுமையான ஆர்வமுடனும் அர்ப்பணிப்புத் தன்மையுடனும் கிரிக்கெட் விளையாட்டில் இலங்கையர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இலங்கை வீரர்கள் சாதுவானவர்கள் ஆனால் கிரிக்கெட் அரங்கில் ஆக்ரோஷமானவர்களாகத் திகழ்கின்றனர்.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் கட்டமைப்பு ஒப்பிட முடியாத அளவுக்கு உயரிய நிலையில் இருக்கிறது. எனது நாட்டில் அவ்வாறு இல்லை. சிறந்த பாடசாலை கிரிக்கெட் கட்டமைப்பின் மூலம் அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி. சில்வா, சனத் ஜயசூரிய, சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன் போன்ற திறமைசாலிகள் உருவானார்கள்.

இந்த விருது விழாவுக்கு வருகை தருமாறு எனக்கு அழைப்பு விடுத்த ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபாலவுக்கு விசேட நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

இலங்கை கிரிக்கெட்டுக்கு எந்த நிலையிலும் உதவத் தயாராக இருக்கின்றேன்.

பாகிஸ்தானும் இலங்கையும் ச்கோதர நாடுகள். எனவே ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருக்க வேண்டும்'' என்றும் தெரிவித்துள்ளார்.

# இளம் வேகப் பந்துவீச்சாளர்களுக்கு பயிற்சி வழங்க கொழும்பில் அக்ரம்!



கொழும்பு, டிசெ.02

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான வசிம் அக்ரம் இலங்கை கிரிக்கெட்டுக்கு பந்துவீச்சு பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக இலங்கை கிரிக்கெட் சபையுடன் இணைந்துள்ளார்.

வசிம் அக்ரம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் இணைந்து கொண்டமையை அறிவிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைமையகத்தில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவின் தலைமையில் நடைபெற்றது.

வசிம் அக்ரம் அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கை கிரிக்கெட்டுக்கு வேகப் பந்துவீச்சு தொடர்பிலான செயலமர்வுகள் பயிற்சிப் பாசறைகள் ஆகியவற்றை நடத்தி இலங்கையில் இளம் வேகப்பந்து வீச்சாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான பந்து வீச்சு உத்திகளையும் நுணுக்கங்களையும் கற்பிக்கவுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த வசிம் அக்ரம், இலங்கை கிரிக்கெட்டுடன் இணைந்து கொண்டமை எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. 18 வயது முதல் 24 வயது வரை மிகவும் வேகமாக பந்து வீச முடியும். இதுவே வேக பந்து வீச்சாளரொருவரின் சிறந்த காலப் பகுதியாகும்.

ஆகவே இந்த வயதுப் பிரிவில் உள்ளவர்களில், அவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்களுக்கு மேலும் பயிற்சிகளை வழங்குவதே எனது பிரதான பொறுப்பாகும் என்று தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கான பந்து வீச்சு பயிற்சிகளை நேற்று முன்தினம் வழங்கியபோது இளம் வீரர்கள் சிலர் மணிக்கு 135 க்கும் 145 கிலோ மீற்றர் இடைப்பட்ட வேகத்தில் பந்து வீசியதுடன் பந்தை சுவிங் செய்யும் ஆற்றலையும் கொண்டிருந்தார்கள். இலங்கை கிரிக்கெட்டுக்கு சிறந்த எதிர்காலம் உண்டு என்பதற்கு இது சிறந்ததொரு அடையாளமாகும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# சர்வதேச நீச்சல் போட்டியில் யாழ். சிறுமி தனுஜா சாதனை





திருச்சி, டிசெ.03

சி.பி.எஸ்.ஈ. பாட கற்கை நெறிகளை கொண்ட வளைகுடா நாடுகளும் இந்திய நாடும் சேர்ந்து நடத்திய சர்வதேச நீச்சல் போட்டியில் யாழ். சிறுமி தனுஜா சாதனை படைத்துள்ளார்.

மத்திய பிரதேசம் போபாலில் வளைகுடா நாடுகள் மற்றும் இந்திய தேசிய அளவிலான 5000 பள்ளிகளுக்கு கடந்த 15.16.17.18 ஆகிய திகதிகளில் இடம்பெற்ற போட்டியில் வல்வெட்டித் துறையை சேர்ந்த தனுஜா ஜெயக்குமார் (வயது -10) என்ற சிறுமி பதக்கம் வென்றுள்ளார்.

இந்தப் போட்டிகளில் 11 வயது உட்பட்ட இரண்டு தனி நபர் பிரிவில் பங்கேற்ற தனுஜா 50 மீற்றர் (Butter Fly) நீச்சல் பிரிவில் 36.90 வினாடிகளில் குறித்த தூரத்தை கடந்து வெள்ளி பதக்கத்தை தனதாக்கியதுடன், 50 மீற்றர் free style நீச்சல் பிரிவில் குறித்த தூரத்தை 34.70 வினாடிகளில் கடந்து வெண்கல பதக்கத்தையும் தனதாக்கியுள்ளார்.


தமிழ்நாட்டிற்கு மாநில அளவில் 4 போட்டிகளில் 12 பதக்கங்களும், தென் மண்டல 2 போட்டிகளில் பங்கு பற்றி 3 பதக்கங்களும் இந்திய அளவில் பங்குபற்றி 2 பதக்கங்களும் இந்த ஆண்டு இவர் இது வரை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் திருச்சியில் அகதி அந்தஸ்துடன் வாழ்ந்து வரும் இந்த மாணவி, விடாமுயற்சியாலும் தொடர் பயிற்சியாலும் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

# தடைப்பட்டுள்ள இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட்; கொழும்பில் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு





லாகூர், டிசெ.03

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தடைப்பட்டுள்ள இருதரப்பு கிரிக்கெட் உறவுகள் குறித்து இரண்டு நாட்டு அதிகாரிகளும் இலங்கையில் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பு கொழும்பில் இம்மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார் கான் தலைமையில் ஆசிய கிரிக்கெட் சபைக் கூட்டம் கொழும்பில் இம்மாதம் நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி நஜாம் சேதி, சபை உத்தியோகத்தர் சுபான் அஹ்மத் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருதரப்பு கிரிக்கெட் உறவுகள் குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் அநுராக் தக்கூருடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

ஒருவேளை இந்தியாவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காவிடின் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பது குறித்து பாகிஸ்தான் ஆலோசிக்கலாம் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. தென்னாபிரிக்காவில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட்டத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவருக்குப் பதிலாக கலந்துகொண்ட பிரதம நிறைவேற்று அதிகாரி நஜாம் சேதி, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தக்கூருடன் விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

ஐ.சி.சி. மகளிர் கிரிக்கெட் லீக் போட்டியில் பாகிஸ்தானுடன் துபாயில் விளையாடுவதற்கு மகளிர் அணியை அனுப்புவதற்கு இந்தியா மறுத்தது. இதனால் தங்களுக்கு 6 புள்ளிகளை வழங்க வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் சபையிடம் பாகிஸ்தான் கோரியிருந்தது.

மும்பையில் 2008 இல் இடம்பெற்று பயங்கரவாத குண்டுத்தாக்குதலின் பின்னர் இரண்டு நாடுகளும் முழுமையான இருதரப்பு தொடர்களில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தானுடன் கிரிக்கெட் விளையாடும்படி இந்தியாவுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுப்போம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார் கான், கூறியுள்ளார்.

இது தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவரும், அண்மையில் ஆசிய கிரிக்கெட் சபை தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவருமான ஷஹாரியார் கான் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எங்களுக்கு எதிராக கிரிக்கெட் விளையாடுங்கள் என்று இந்திய கிரிக்கெட் சபை நாங்கள் கெஞ்சவில்லை. அப்படியொரு எண்ணத்தை வைத்துக் கொள்ள வேண்டாம்.

2015 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பாகிஸ்தான் அணியுடன் 6 நேரடி கிரிக்கெட் தொடர்களில் விளையாட சம்மதித்து அதற்குரிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு உரிய மதிப்பு அளித்து செயல்படும்படி இந்தியாவை நிர்ப்பந்திக்க, ஒரு கிரிக்கெட் தேசமாக எல்லா உரிமையும் எங்களுக்கு உண்டு. 2007 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையே முழுமையான தொடர் எதுவும் நடைபெறவில்லை. இப்போதைக்கு உடனடியாக இரண்டு நேரடி தொடர்களில் விளையாட இந்தியா முன்வர வேண்டும்.

ஒப்பந்தத்தின்படி மேற்கண்ட காலக்கட்டத்தில் நாங்கள் நடத்த வேண்டிய தொடர்களின் எண்ணிக்கை 4 ஆகும். அதாவது இது எங்களது உள்ளூர் போட்டி போன்றதாகும். பாகிஸ்தானுடன் விளையாட இந்தியா தொடர்ந்து மறுப்பதால் அதனால் மிகப்பெரிய வருவாய் இழப்பை சந்தித்துள்ளோம். ஏற்கனவே இந்த விவகாரத்தை சர்வதேச கிரிக்கெட் சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

ஒப்பந்தத்துக்கு உடன்பட மறுக்கும் இந்திய கிரிக்கெட் சபை மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து வழக்கறிஞர்களுடன் ஆலோசித்து வருகிறோம். இந்த மாதத்தில் ஆசிய கிரிக்கெட் சபை கூட்டம் இடம்பெறவுள்ளது. அப்போது இந்த பிரச்சினையை கிளப்புவோம் என்று தெரிவித்துள்ளார்.

## மும்பை டெஸ்டில் சஹா விளையாடுவது சந்தேகம்!

மும்பை, டிசெ.03

இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து விக்கெட் காப்பாளர் ரித்திமான் சஹா காயம் காரணமாக விலகினார்.

இந்நிலையில் அவர் 4ஆவது டெஸ்டில் இடம் பெறுவதிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

3 ஆவது டெஸ்டில் சஹாவுக்குப் பதிலாக பார்த்திவ் பட்டேல் சேர்க்கப்பட்டார்.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற போட்டியின்போது ரித்திமான் சஹாவின் இடது தொடையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து, அவருக்கு ஓய்வளிக்கப்பட்டது. ஆனால், அவர் இன்னும் முழு உடற்தகுதி அடையாததால் 4 ஆவது டெஸ்ட் போட்டியிலும் விளையாட மாட்டார் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஏழாவது இடத்துக்கு முன்னேறினார் சிந்து

டில்லி, டிசெ.03

ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் மற்றும் சீன ஓபன் பட்டத்தை வென்ற இந்திய வீராங்கனை பி.வி.சிந்து வீட்மிண்டன் தரவரிசை பட்டியலில் 2 இடங்கள் முன்னேறி 7 ஆவது இடத்தைப் பிடித்து உள்ளார்.




பி.வி.சிந்து இந்த ஆண்டு சீன ஓபனை வென்றார். அதேபோல், ஹொங்கொங் ஓபன் போட்டியில் 2 ஆவது இடத்தைப் பிடித்தார்.

இந்த நிலையில் சர்வதேச பட்மிண்டன் சம்மேளம் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் பி.வி.சிந்து 2 இடங்கள் முன்னேறி 7 ஆவது இடத்தைப் பிடித்து உள்ளார். சாய்னா நேவால் 10 ஆவது இடத்திலும் இந்திய வீரர் சமர்வர்மா 30 ஆவது இடத்திலும் உள்ளனர்.

## உதைபந்தாட்ட கழகங்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்!

லண்டன், டிசெ.03

பிரித்தானியாவில் உள்ள உதைபந்தாட்ட கழகங்களில் சுமார் 350 பேர் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அந்தக் கழகத்தின் தலைமைக் காவலரான சைமன் பெய்லி கூறியதாவது:-

நாட்டில் அதிகரித்து வரும் உதைபந்தாட்ட கழகங்களில் குழந்தை பாலியல் துஷ்பிரயோக புகார்கள் குறித்த கால்பந்து கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்றி வருகின்றோம். குழந்தைகளுக்கு எதிராக வதைத் தடுப்புச் தேசிய சங்கம், கடந்த நவம்பர் 23 ஆம் திகதி புகார் அளிக்க தொலைபேசி எண் ஒன்றை வெளியிட்டது. அதில், தற்போது வரை 860 பேர் அழைப்பு விடுத்து குழந்தை பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களையும் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்துள்ளனர்.

புகார்கள் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளிப்பதற்கான ஊக்குவிப்புகள் தொடரும். அனைத்து புகார்கள் மீதும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஒரு கழகம் அணியில் பயிற்சி பெற்ற 20க்கும் மேற்பட்ட வீரர்கள், தங்கள் பயிற்சியாளர் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றம்சாட்டினர். அதையடுத்து, பலர் தைரியமாக முன்வந்து புகார்களை அளித்து வருகின்றனர்.

# 'சுடத் தெரியாவிட்டால் துவக்கைத் தாருங்கள்' என்று கூறி ஆயுதங்களைப் பறிக்க முயன்றனர்

## 2001 தாக்குதல் வழக்கில் பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியம்

"நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்குச் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் உங்களுக்குச் சுடத் தெரியவில்லைஎன்றால்ஆயுதங்களை எங்களிடம்தாருங்கள்எனக்கூறி எங்கள் ஆயுதங்களைப் பறிக்க வந்தனர். ஆனால், நாங்கள் அதற்கு இடமளிக்கவில்லை."

-இவ்வாறு சாட்சியமளித்தார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்நடராஜாரவிராஜின் மெய்ப்பாதுகாவலர்களின் ஒருவரான அபயசிங்க முனசிங்க.

கடந்த 2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்காக ஊர்காவற்றுறைக்குச்சென்றதமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தி இருவரைப் படுகொலை செய்தவழக்குவிசாரணையாழ். மேல் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. நேற்று இடம்பெற்ற விசாரணைகளின்போது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றுவரும் விசாரணையில் 6 ஆவது நாளான நேற்று இந்த வழக்கின் 34 ஆவது சாட்சியான அமரர் நடராஜா ரவிராஜின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவரான அபயசிங்க முனசிங்க மன்றில் ஆஜராகி சாட்சியம் அளித்தார்.

சட்டமா அதிபர்திணைக்களத்தின் அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த் சாட்சியை நெறிப்படுத்தியிருந்தார்.

கேள்வி:-உங்களுடன்வேறு எத்தனை பேர் அமரர் ரவிராஜுக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றினீர்கள்?

பதில்:-பொலிஸ் சீருடையில் சாந்திகுமார, திலகரட்ன ஆகிய இருவர். என்னையும் சேர்த்து மூன்று பேர்.

கேள்வி:- அமரர் ரவிராஜ் ஏன் ஊர்காவற்றுறை சென்றிருந்தார்?

பதில்: தேர்தல் பிரசரர நடவடிக்கைகளுக்காக.

கேள்வி:- எங்கிருந்து உங்கள் பயணம் ஆரம்பமானது?

பதில்:-யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இருந்து.

கேள்வி:-ஊர்காவற்றுறைக்கு நீங்கள் எந்த வாகனத்தில் போனீர்கள் என ஞாபகம் இருக்கிறதா?

பதில்:- வெள்ளை நிற ரவுனேஸ் வாகனம்.

கேள்வி:- ஊர்காவற்றுறை தேர்தல் பிரசாரத்துக்கு உங்களுடன் சேர்ந்து எத்தனை பேர் போனீர்கள்?

நானும், என்னுடன் சேர்ந்து சீருடை தரித்த இருவரும். சாரதியாக ஒருவரும் இருந்தார். அவரை நாங்கள் கோபி அண்ணா என்றுகூப்பிடுவோம்.

கேள்வி:- எத்தனை வாகனங்கள்தேர்தல்பிரசாரத்துக்குச் சென்றன?

பதில்:- 10 வாகனங்கள்.

கேள்வி: உங்களுடன் சேர்ந்து எத்தனை பேர் போனீர்கள்?

பதில்:- கிட்டத்தட்ட 40 பேர்.

கேள்வி: நீங்கள் சென்ற ரவுனேஸ் வாகனம் எத்தனையாவதாகச் சென்றது?

பதில்: 10 ஆவதாக .

கேள்வி: ஊர்காவற்றுறை - நாரந்தனை பகுதியில் நீங்கள் சென்ற வாகனத்துக்கு முன்னால் என்ன நடந்தது? நீங்கள் கண்ணால் கண்டதைச் சொல்லுங்கள்.

பதில் - நாங்கள் ஊர்காவற்றுறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது நாரந்தனை பகுதியில் எங்கள் வாகனத்துக்கு முன்னால் சென்ற வாகனத்துக்கு தாக்குதல்மேற்கொள்ளப்பட்டது.

நாங்கள் கதவைத் திறந்து வெளியில்சென்றபோதுமாவை சேனாதிராசா காயங்களுடன் வந்தார். சிவாஜியைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள் எனச் சொன்னார்.

அதன்பின்னர்நாடாளுமன்ற உறுப்பினருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருந்தனால் ரவிராஜ் ஐயாவைக் காருக்கு செல்லுமாறு கூறி உள்ளே தள்ளினோம்.

அப்போது எங்களை நோக்கி வந்த இருவர் எங்களுடன் தர்க்கப்பட்டு, உங்களுக்குச் சுடத் தெரியவில்லை என்றால் உங்கள் துப்பாக்கியைத் தாருங்கள் எனப் பறிக்க முற்பட்டனர். நாங்கள் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. வந்தவர்கள் அப்படியே சென்றுவிட்டார்கள்.

கேள்வி:-உங்களைத் தாக்க வந்தவர்கள் என்ன வாகனத்தில் வந்தார்கள்?

பதில்:-வாகனத்தைக் காணவில்லை. தாக்கவந்தவர்களைக் கண்டோம்.

கேள்வி: எத்தனை பேர் வரையில் இருந்தார்கள்?

பதில்:10 பேர் வரையில் இருந்தனர்.

கேள்விகள் தொடர்ந்தன. அவர் சாட்சியமளித்தார். இறுதியாகத் தாங்கள் காயமடைந்தவர்களையாழ்.போதனாவைத்தியசாலைக்குக் கொண்டுசென்றார்கள் எனக் கூறினார்.

(ம- 09)

## கூட்டமைப்பு மீதான தாக்குதல் வழக்கு; அரசுத் தரப்பின் சாட்சியங்கள் முடிவு

2001 ஆம் ஆண்டு நாரந்தனையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்மீதுநடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அதில் இருவர் உயிரிழந் தமை தொடர்பான வழக்கு விசாரணையில்அரசுத் தரப்புச் சாட்சி யங்களின் பதிவு நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

மேற்படி விடயம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பகிர்வுப் பத்திரத்தில் குறிக்கப்பட்ட நான்கு எதிரிகளுக்கும் எதிரான வழக்கு கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதியில் இருந்து யாழ்.மேல் நீதிமன்றில், நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்று வந்தது.

நேற்றுடன் வழக்குத் தொடுநர் தரப்பிலான பக்க விளக்கம் முடிவுறுத்தப்பட்டது என சட்டமா அதிபர் திணைக்கள அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த மன் றில் தெரிவித்தார்.

இந்த வழக்கின் குற்றப் பகிர்வுப் பத்திரத்தில் 40 சாட்சிகள் குறிப்பிடப்பட்டிருந்தனர். இவற்றுள் தாக்குதல் சம்பவத்தைக் கண்ட சாட்சிகளான மாவை சோமசுந்தரம் சேனாதிராஜா, கனகலிங்கம் சிவாஜிலிங்கம், கனகரத்தினம் விந்தன், சுரேஷ் பிறேமச்சந்திரன், நவரட்ணம் கணேஸ், நவரணம் ரவீந்திரன், தர்மரட்ணம் தமிழ்வேந்தன் ஆகிய சாட்சிகள் முற்படுத்தப்பட்டன.

தற்பொழுது இந்தச் சாட்சிகளை விட மன்றுக்கு சாட்சிகளாக அழைக்க முடியாத - அழைப்புக் கட்டளை அனுப்பி வைக்க முடியாத - சாட்சிகளினதும், இறந்துவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்ட சாட்சிகளினதும் முன்னைய சாட்சியங்கள் நீதிபதி முன்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கின் வழக்கு தொடுநர் தரப்பினரது விளக்கம் நேற்றுடன் முடிவுறுத்தப்பட்டது.

எதிரிகள் தரப்பு விரும்பினால் கூண்டுக்குள் இருந்தோ அல்லது வெளியில் இருந்தோ சாட்சியமளிக்க முடியும் என்றும், புதிய சாட் சிகளையும் அழைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-ம-09)

## நாரந்தனைத் தாக்குதல் வழக்கில் நேற்று முன்னாள் நீதிவான் சரோஜினி சாட்சியம்

2001 ஆம் ஆண்டு நாரந்தனையில் கூட்டமைப்பினர் மீது இடம்பெற்ற தாக்குதல் வழக்கு விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மேல் நீதிமன்றில் இடம்பெற்றபோது ஓய்வுபெற்ற நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன்மன்றில்ஆஜராகி சர்ட்சியமளித்தார்.

ஊர்காவற்றுறைப் பகுதிக்கு தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். இது தொடர்பான விசாரணைகள் யாழ். மேல் நீதிமன்றில் கடந்த பத்து நாட்களாக இடம்பெற்று வருகின்றன.

சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவானாக கடமையாற்றிய திருமதி சரோஜினி இளங்கோவன் நேற்று மன்றில் முன்னிலையாகியிருந்தார். சாட்சியை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந் நெறிப்படுத்தினார்.

கேள்வி:-ஊர்காவற்றுறை இரட்டைப்படுகொலைதொடர்பில் கைதான சந்தேக நபர்களின் அடையாள அணிவகுப்பு எப்போது நடைபெற்றது?

பதில்:- 2001.12.11 ஆம் திகதி பி.ப 1:00 மணியளவில்.

கேள்வி:- உங்களால் மேற்கொள்ளப்பட் அடையாள அணிவகுப்பு எங்கு இடம்பெற்றது?

யாழ்ப்பாணம் நீதிமன்றில். அன்றைய காலப்பகுதியில் ஊர்காவற்றுறை நீதிமன்ற நியாயாதிக்க எல்லை யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

கேள்வி:- அன்றையதினம் அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்பட்டபோது அடையாளம் காட்ட எத்தனை சாட்சிகள் அழைக்கப்பட்டிருந்தனர்?

பதில்:-இரண்டு சாட்சிகள்.

1. கனகரட்ணம் விந்தன்.
2. ஆரியரட்ணம் ஜோதிபாலா

கேள்வி:- யார், யார், அடையாளம் காட்டினார்கள்?

பதில்:-இரண்டாவதுசாட்சியான ஆரியரட்ணம் ஜோதிபாலா அன்ரன் ஜீவராஜ் அல்லது ஜீவன் என்பவரை அடையாளம் காட்டியிருந்தார். - என்று சாட்சியம் அளித்தார். (ம-09)

## கருணா பக்க நியாயத்தை எடுத்துரைக்கிறார் வீரவன்ஸ

கொழும்பு, டிசெ.03

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள எதிரணிப் பிர்முகர்களான திஸ்ஸ அத்தநாயக்க, கருணா(விநாயகமூர்த்திமுரளிதரன்) ஆகியோரைக் கூட்டு எதிரணி எம்.பிக்களான விமல் வீரவன்ஸவும், உதய கம்மன்பிலவும் நேற்று கொழும்பு மகஸின் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர்.

சிறைச்சாலையை விட்டு வெளியேறும்போது கருணா, திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் பக்க நியாயங்களை எம்.பிக்கள் இருவரும் ஊடகவியலாளர்களுக்கு எடுத்துரைத்தனர்.

திஸ்ஸ அத்தநாயக்க இனவாதத்தைத் தூண்டும் எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை. மாறாகப் பிரதமர் ரணில் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர்சம்பந்தன் ஆகியோர் மேற்கொண்டுவரும் திருட்டு ஒப்பந்தம் பற்றிய தகவல்களையே அவர் வெளியிட்டார். அரசியல்வாதி என்ற ரீதியில் தனது தேசியக் கடமையை நிறைவேற்றியதன் காரணமாகவே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா, அரச வாகனத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்த வாகன விடயம் குறித்து உரிய காலத்தில் அவர் எழுத்துலமாக ஜனாதிபதி செயலகத்துக்கு தகவல் வழங்கியுள்ளார். ஜனாதிபதியின் செயலாளரின் அலுவலகச் செயற்பாடுகளுக்கானதவறுக்கு அவர் பொறுப்புக்கூற வேண்டிய எந் தத் தேவையும் இல்லை.

இவ்வாறு அரசியல் கைதிகளின் எண்ணிக்கையை அதிகக்க அரசுத் தரப்பினர் முயற்சிக்கின்றனர். கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்களைச் சிறையில் வைத்து மடக்கித் தீவிரவாதப் போக்கைக் கையாள எத்தனிக்கின்றனர்.

இன்று ஆறு அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். எந்தக் காரணமும் இன்றி அரசு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்காகவே எதிரணி அரசியல்வாதிகளை அரசு மிரட்டுகின்றது - என்றார் விமல் வீரவன்ஸ. (உ)

## வழிமறிப்புச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான வீதியில் கல்கந்தப் பகுதியில் ரயில் பாதையை மறித்து இந்தப் போராட்டத்தை ஓட்டோச் சாரதிகள் நேற்று நடத்தினர்.

இதனால், நேற்று முழுவதும் அப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

அதேசமயம், கொழும்பு - சிலாபம் தரைவழிப்பாதையில் ஓட்டோச் சாரதிகள் நேற்று வழிமறித்து போராட்டம் நடத்தினர்.

இப்படிபாதைகளைவழிமறித்து போராட்டம் நடத்துவதற்கு எதிராக கொழும்பு நீதிவான் நீதிமன்றம்நேற்றுப்பகல்தடைஉத்தரவு ஒன்றைப் பிறப் பித்திருந்தது.

அதன் பின்னரே கண்ணீர்ப் புகைகுண்டுவீசிஓட்டோச்சாரதிகளின் போராட்டத்தில் ஈடுபட்டோரை கலைக்கும் நடவடிக்கைகளைப் பொலிஸார் எடுத்தனர். (உ)

## மட்டு நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

னால் பகிரங்கமாகத் திட்டித் தீர்த்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். பெண் பிரதேச செயலாளர் ஒருவரையும், பெண் கான்ஸ்டபிள் ஒருவரையும் கூட கேவலமாக ஏசி பலத்த கண்டனத்துக்கு உள்ளானவர்.

இவரின் போக்குக்கு எதிரான குரல் பகிரங்கமாக ஒலிக்கத் தொடங்கியுள்ள சூழலிலேயே, அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு ஆதரவு காட்டுவதற்காக அங்கு செல்கின்றோம் என்று கூறிக் கொண்டு பொதுபலசேனா பிக்குகள் மட்டக்களப்புக்குப் புறப்படுகின்றார்கள்.

வண.சுமணதேரருக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகளுக்கு நிரந்தரமாக ஆப்பு வைக்கும் எத்தனமாகவே இந்த ஆர்ப்பாட்டத்துக்குப் பொதுபலசேனா முஸ்தீபு செய்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பொதுபலசேனாவின் செயலாளர் வண.கலகொட அத்த ஞானசார தேரர் தலைமையிலேயே இந்தப் பிக்குகள் அணி இன்று மட்டக்களப்புக்கு படையெடுக்கின்றது.

"இந்தப் படையெடுப்பால் விபரீதங்கள் நேரலாம். பெரும் பதற்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது" - என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சுஹைர் தெரிவித்திருக்கின்றார். (உ)

## அம்பாறையி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்ட பாரிய புத்தர் சிலையால் அங்கு பதற்ற நிலை நீடித்ததும், அது இப்போது தணிந்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

தெற்கிலிருந்து புறப்படும் பொதுபலசேனா பிக்குகள், முதலில் அம்பாறை மாணிக்கமடுவுக்குப் போய், அங்கு குன்றில் புத்தச் சிலை வைத்த தீவிரவாத பௌத்த -சிங்களத் தரப்பினருக்குத் தமது ஆதரவைக் காட்டும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

அச்சமயத்தில் அம்பாறை நகரில் இனக்குரோத நடவடிக்கைகள் தீவிரமடையும் வாய்ப்பு இருக்கிறது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அம்பாறை நிகழ்வை முடித்துக் கொண்டு சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி ஊடாக அக்குழு மட்டக்களப்புக்கும் செல்லக்கூடும் எனவும் கருதப்படுகின்றதுது.

இவர்களின் அணி செல்லும் பாதைகளில் பல முஸ்லிம், தமிழ்க் கிராமங்களைத் தாண்ட வேண்டியிருக்கும். அச்சமயத்திலும் ஏதேனும் விபரீதம் நேரலாம் என அஞ்சப்படுகிறது. (உ)

## குமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரேலியாலிருந்து சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டங்களை மீறினார் என இவ ருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டது.

இதனையடுத்து கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டார்.

வழக்கு விசாரணைக்கு பின்னர் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி அவருக்கு ஒரு வருட கால சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டது.

இந்த நிலையில் சிறைச்சாலைவிதிமுறைகளுக்குஅமைய குமார் குணரட்னத்தின் தண்டனைக் காலம் எதிர்வரும் 9 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

எனினும் நேற்று அவரை சிறையில் இருந்து விடுவிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர்
Kalaikkathir

## ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி இரவு யாழ். பல்கலைக்கழக 3ஆம் வருட கலைப்பீட மாணவர்களான விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகியோர் பொலிஸாரினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தநிலையில் இவர்கள் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவை எதுவும் இடம்பெறாததால் பயணிகள் நேற்று பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

இந்த விடயத்தில் அரசாங்கம் தங்களுக்குச் சாதகமான தீர்வை முன்வைக்கும் வரை போராட்டம் தொடரும் என பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துடன் பேச்சுக்குச் செல்ல தங்களில் 20 பிரதிநிதிகள் தயாராக இருக்கின்றனர் எனவும் பேசுவதற்கு அரசாங்கம் சந்தர்ப்பம் தரவில்லை எனவும் மேற்படி சங்கத் தலைவர் சரத் விஜித குமார தெரிவித்தார்.

பணிப்புறக்கணிப்பை நிறுத்தி விட்டுப் பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார் எனப் போக்குவரத்து பிரதியமைச்சர் அபயசிங்க கூறுகின்றார்.

ஆனால், பணிப் புறக்கணிப்பு ஒருபக்கம் நடைபெறட்டும், நாங்கள் பேச்சுக்கு வருகின்றோம் என்று சங்கத் தலைவர் தெரிவிக்கின்றார்.

மேலும், ஐந்து பேரை மட்டுமே பேச்சுக்கு வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ள நிலையில், அப்படி வர முடியாது, எங்களில் 20 பேர் வருவோம் என்று பஸ் உரிமையாளர் சங்கம் கூறிவருகின்றது.

இவ்வாறு இரு தரப்பினருக்கும் இடையே இழுபறி நிலை நீடிப்பதால் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இப்போதைக்கு முடிவுக்கு வரும் என்பது சந்தேகமே என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னார் எனவும் நேற்றுக் காலை பாலத்தில் அவரது சில ஆடைகளும் அடையாள அட்டையும் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து உறவினர்களும் பொலிஸாரும் இணைந்து அவரைத் தேடிய போதே நேற்றுக் காலை சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. முகத்துவாரத்தில் சடலம் ஒன்று இருப்பதாக மீனவர்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர். இதன் பின்னரே அது பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் என இனங்காணப்பட்டது.

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இரவு காணாமல் போனார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வின் போது சிங்கள மாணவர்கள் கண்டிய நடனத்தை ஏற்பாடு செய்தமையால் தமிழ், சிங்கள மாணவர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது.

இதன்போது காயமடைந்த சிங்கள மாணவன் ஒருவன் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தமிழ், சிங்கள மாணவர்களால் எதிர் எதிராக முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டன. இதையடுத்து மோதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வந்தன.

இந் நிலையில் வழக்குகளை வாபஸ் பெறுகின்றனர் எனத் தமிழ், சிங்கள மாணவர்கள் நேற்று நீதிமன்றத்தில் அறிவித்தனர் எனச் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

## அசம்பாவி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத் தும் எந்த விதமான செயற்பாடுகள் இடம்பெறினும் அதனுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இலங்கையிலும் கிழக்கு மாகாணத்திலும் மக்கள் அச்சமின்றி இயல்பாக சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது.

மக்களின் சுதந்திரமானதும் நிம்மதியானதுமான வாழ்க்கையை முன்னெடுப்பதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய கடப்பாடு அரசியல் நிர்வாகத்தினர் மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு உள்ளது.

மட்டக்களப்பு நகரில் இடம் பெறவுள்ளதாகக் கூறப்படும் குறித்த ஒரு சாராரின் ஆர்ப்பாட்டம் காரணமாக மக்கள் அச்சமடைந்துள்ளனர் என எனக்கு அறியக் கிடைத்தது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே அவர்களின் ஒற்றுமைக்கோ சகவாழ்வுக்கோ பங்கம் ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாட்டையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

ஆகவே ஒருமைப்பாட்டை குலைத்து அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் எவ ராவது செயற்பட்டால் உடனடியாக அவர்கள் மீது சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

மக்களின் உடமைகளுக்கோ உயிர்களுக்கோ எவ்வித பாதிப்பும் நேராது அவற்றுக்கு உத்தரவாத மளித்து பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்பதை பொலிஸார் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே, ஏதாவது அசம்பா விதங்கள் இடம்பெற்றால் அதற் கான முழுப் பொறுப்பையும் பொலிஸாரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் எந்த வித அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும் பொலிஸார் எப்போதும் தயார்நிலையில் இருக்க வேண்டும் எனவும் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளமையைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.
- என்றார்.

## இந்தியாவிலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களத்தின் கிளை நிறுவனமான றைட்ஸ்க்கு ஏற்கனவே குறித்த ஒப்பந்தம் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது.

இந்திய ரயில்வேத் திணைக்களத்திலிருந்து ஏற்கனவே இலங்கைக்கு ரயில்வே உபகரணங்கள் மற்றும் நிர்மாணப் பணிகளுக்கான ஓடர்கள் கிடைக்கப்பெற்றிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை இந்தியா ஏனைய நாடுகளுக்கு ரயில்வே உபகரணங்களை ஏற்றுமதி செய்வதில் மாற்றம் கண்டுள்ளதாக இந்திய ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு தெரிவித்திருந்தார்.

### *இன வெறுப்புப் பிரசாரம்:*

# டொன் பிரியசாத்துக்கு நேற்று கடும் நிபந்தனையுடன் பிணை

'டொன் பிரியசாத்' என அழைக்கப்படும் தெமட்டகொட சுரேஷ் பிரியசாத் கடும் நிபந்தனையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

20 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுக்கப்பட்டுள்ள இவருக்கு இதே குற்றத்தை மீண்டும் செய்தால் இந்த வழக்கு விசாரணை நிறைவு பெறும் வரை சிறையில் இருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் எதிர்வரும் பெப்ரவரிமாதம் 17 ஆம்திகதிக்குஒத்திவைக்கப்பட்டது.

மானிப்பாய் HNB எதிரில் எடிசனின் புதிய கிளை
எடிசன் அக்கடமி
தரம் 6,9 < English Medium / தமிழ் மொழி மூலம்
அனுமதிகளை தொலைபேசி மூலம் உறுதி செய்யவும்
ஆரம்பம் • 04.12.2016 (ஞாயிறு பி.ப 4.00 மணி)
Tel: 077 77 37 926

ASSOCIATION OF NORTH NEW PRINCIPALS
வடக்கு மாகாண புதிய அதிபர்கள் சங்கம்
North province, Srilanka வடக்கு மாகாணம், இலங்கை
வட மாகாண புதிய அதிபர்களுக்கான
முக்கியமான கலந்துரையாடல்
இடம் : நாவலர் கல்வி நிலையம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
நேரம் : 03.12.2016 (சனிக்கிழமை) பி.ப 1.00 மணி.
குறிப்பு : அதிபர்கள் தம்முடன் அதிபர் நியமனக்கடிதம், மத்திய கல்வி அமைச்சால் மாகாணத்திற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்ட கடிதம் ஆகியவற்றின் பிரதிகளைக் கொண்டுவரவும்.
வடக்கு மாகாண புதிய அதிபர்கள் சங்கம்

N.P.K.Computer Repair
CCTV கமரா பொருத்துதல் மற்றும் திருத்த வேலைகள் 2 வருட உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கணனி உதிரிப்பாகங்கள் விற்பனை மற்றும் திருத்த வேலைகள் வடமாகாணத்தின் எப்பாகங்களிலும் வீடுகளுக்கு வந்து செய்து கொடுக்கப்படும்.
C/086 தொடர்புகளுக்கு:-0777064151

SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் (முருகன் ஆலயம் அருகாமை) அரியாலை (ஸ்ரான்லிக் கல்லூரி அருகாமை)
தரமான கல்வியை வழங்கும் என்றும் முதற்தர கல்வி நிறுவனத்தின்
புதிய கல்வியாண்டு - 2017
30 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம்
அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.
நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்
தமிழ்மொழி மூல வகுப்புக்கள் தரம் 6 முதல் O/L வரை
English Medium Classes Gr. 6 - O/L
வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு தரம் 1 முதல் தரம் 5 வரை வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
03.12.2016 சனிக்கிழமை பி.ப 3.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.